
# திருக்கோயில்

ஜனவரி 91 விலை: ரூ. 3





பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில் திருப்பணிகளை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ., அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமிகு க.சுந்தரம் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் சந்திரசேகர், பரம்பரை அறங்காவலர் பி.எஸ்., சேதுரத்தினம்மாள், உதவி ஆணையாளர் திரு ப.ராஜா மற்றும் செயல் அலுவலர் திரு மு.ராமச்சந்திரன் ஆகியோர் உடன் உள்ளனர்.

முகப்பு:

21-1-1991இல் திருக்குட நீராட்டு விழா காண இருக்கும் சேலம் அம்மாப்பேட்டை அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரமோதூத ஆண்டு தை ஜனவரி 1991 விலை ரூ. 3-00 | மணி : 1


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


பாம்போடு உடன்உறைந் தற்று
—மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள்

காணாத கண்கள்
—திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

திருக்குடநீராட்டு விழா காணும் திருக்கழுக்குன்றம்
—முதுபெரும் புலவர் வேதாசலம்

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

சோழநாட்டுத் திருப்பதிகள்
—நித்திலக்கோ

திருக்கேதீஸ்வரம்
—ஆர். நமசிவாயம்

விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்.
—கோ. சண்முகம்

சித்திரபாரதம்
—செவ்வேள்

சரணம் பொன் ஐயப்பா
—ஐயப்பன் அடிமை

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்


## நல்வாழ்த்துக்கள்


**திருக்கோயில் இதழ் வாசகர்களுக்கு மனம் நிறைந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# பாம்போடு உடன் உறைந்தற்று



மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்




பளபளப்பான உடலைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்தான். தன்னை வளைத்துத் தழுவி நெளிந்திடும்போது மேனி முழுவதும் புல்லரிக்கப் புளகாங்கிதமுற்றான். குழைந்து குழைந்து ஆடிடும்போது குதூகலத்துடன் குதித்தான். ''பாலருந்தடி என் கண்ணே'' என்று பால் கிண்ணத்தை நீட்டுவான். ''என் தங்கமல்ல உனக்காக ஒரு தாலோட்டே இயற்றியிருக்கிறேன். அதைக்கேட்டுக் கொண்டே என் மடியில் உறங்கிடுக'' என்று தலைமுதல் வால் வரையும் தடவிக் கொடுப்பான்.

அவ்வளவு அன்பாக அந்தப்பாம்பை வளர்த்தான் அவன். அதுவும் அவனோடு அந்தக் குடிலிலேயே வசித்தது. குடிலோரமுள்ள குட்டையில் இருந்து தவளைகள் கரைக்குத் தாவி, அந்தப் பாம்பின் வயிற்றுக்குள் போய் விடும். சில நேரங்களில் எலி வேட்டையும் நடத்தும் அந்தப் பாம்பு ஓய்வு கொள்வது அந்தக் குடிலில்தான். உறங்குவது அவன் படுக்கையிலேதான் உடலைச் சுருட்டிக் கொண்டு.

''மான் வளர்ப்பர்-மாடப்புறா வளர்ப்பர் கிள்ளை வளர்ப்பர்- கீரிப்பிள்ளை வளர்ப்பர். நாய் வளர்ப்பர் - பூனை வளர்ப்பர்-ஆனால் யாரும் நான் வளர்ப்பது போல பாம்பு வளர்த்திடமாட்டார். அப்படியே வளர்த்தாலும் அதற்கெனப் பெட்டி செய்து, நச்சுப்பல்லை அகற்றிவிட்டு, நச்சுப் பையையும் நீக்கிவிட்டுத்தான் வளர்ப்பார்கள். அந்தப் பெட்டிக்குள் போட்டு மூடி, அதுவும் பாம்பை வைத்துத் தொழில் நடத்துவதற்காக. ஆனால் நானோ பாம்புடன் நட்புக் கொண்டிருக்கிறேன். பாசத்துடன் பழகுகிறேன். ஒன்றாகப் படுத்துறங்குகிறேன்.''

இப்படிப் பெருமை பேசுவது அவனுக்கு வாடிக்கை. வழக்கம்போல் பணிகளை முடித்து விட்டுக் குடிலுக்குத் திரும்பியவன் பாம்புத் தோழனுடன் கொஞ்சினான். குலவினான். பின்னர் அதை அருகில் படுக்கவைத்துக் கொண்டு உறங்கினான். பாம்பும் நன்கு உறங்கியது.

நள்ளிரவு! அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவன் புரண்டு படுத்தான். அப்படிப் படுத்த போது, அவன் கை வேகமாக அவனது தோழனின் தலையின் மீது விழுந்துவிட்டது. மின்னல் வேகத்தில் ''நாக நண்பன்'' சீறிக்கொண்டு படமெடுத்தான் - சீறிய வேகத்தில் அவன்



கழுத்தில் நச்சுப்பல் நன்கு அழுந்திவிட்டது - மிக அருகிலிருந்த மூளைக்கும் இதயத்திற்கும் நஞ்சின் வாய்க்கால் பெருகியோடியது. நட்பு விஷக்கொடி கட்டிப் பறந்தது. நண்பனின் உயிரும் பறந்தது. குட்டைக் கரையில் ஒரு தவளையின் அழைப்பு... அதையேற்றிட அந்தப் பாம்பு, அமைதியாக ஊர்ந்து சென்றது!

மனப்பொருத்தம் இல்லாதவர்களுடன் கூடி வாழும் வாழ்க்கையானது ஒரே குடிலில் பாம்புடன் இணைந்து வாழ்வதால் ஏற்படும் விளைவை அன்றோ ஒரு நாள் சந்திக்க வேண்டியதைப் போன்ற நிலையை உருவாக்கக்கூடியதாகும் என்று வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

''உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

**—மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ''குறளோவியம்'' பேழையிலிருந்து இக் கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

---




**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை.**

நாடும் நகரும் சிறந்திடவே
நன்செய் புன்செய் செழித்திடவே
வீடும் குடியும் விளங்கிடவே
விற்கும் பொருள்கள் மலிந்திடவே
ஆடும் தில்லை அம்பலவன்
அருளை வேண்டும் தைப் பொங்கல்
பாடும் புலவர் நாவிலெழ
பாக்கள் போலப் பொங்குகவே.

புயலும் பருவ மழைபொழிய
பொருள்கள் எங்கும் விலைமலிய
வயலிற் பயிர்கள் வாய்த்துவர
மக்கள் உள்ளம் மகிழ்ச்சிபெற
அயனும் அரியும் தேடுமரன்
அருளை வேண்டும் தைப்பொங்கல்
பயிலும் அன்பால் ஒருநால்வர்
பாடும் கவிபோல் பொங்குகவே.



# காணாத கண்கள்

திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்

நமது உடலிலுள்ள உறுப்புகளில் கண்கள் மிக முக்கியமானவை. கண்ணின்றி ஒன்றுமில்லை. கண்ணற்றவர்களின் வாழ்க்கை எவ்வளவு கடினமானது என்று அனுபவித்தால் தான் தெரியும். சிலர் பிறவியிலிருந்தே, சில குறைபாடுகளின் காரணத்தால், கண்களால் பார்க்கும் ஆற்றலை இழந்து விடுகின்றனர். சிலருக்கு வயோதிகத்தில் கண் பார்வை தானாகவே குன்றி விடுகிறது. படலத்தினால் கண்ணொளி மறைக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை செய்த பிறகு, மீண்டும் கண்ணொளி பெற்று பார்க்கும் வாய்ப்பு கிடைத்த பொழுதும் கண்களில் ஆற்றல் முழுமையாக இருக்காது; குறைந்தே இருக்கும். இவையெல்லாம் இயல்பாகவே கண்ணொளி அற்ற நிலை என்று எடுத்துக் கொள்ளலாம்.

கண்கள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தாத நிலையும் ஏற்படுவதுண்டு. சில நேரங்களில் நம்முடைய கண்கள் ஏதோ ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும். ஆனால், மனமானது வேறொன்றில் ஊன்றிக் கிடக்கும். கண்கள் திறந்திருந்த நேரத்திலும் அவற்றின் காணும் ஆற்றல் செயல்படுவதில்லை. தெருவிலே நடந்து போய்க் கொண்டிருப்போம். எதிரே ஒரு நண்பர் வருவார். ஆனால், நாம் வேறு எதையோ தீவிரமாக சிந்தித்துக்கொண்டு போய்க்கொண்டிருப்போம். நண்பரைக் கண்கள் பார்க்கின்றன. ஆனால், பார்க்கின்ற இடத்தில் மனம் இல்லை. கண்ணோடு சேர்ந்து மனம் பாராத காரணத்தினால் நாம் அந்த நண்பரைப் பார்க்கவில்லை. நமது ஆழ்ந்த சிந்தனை நாம் பார்க்கும் பொருளுக்கு எதிரே ஒரு மறைப்பாக நின்று விடுகின்றது. அதுபோலவே நம்முடைய கேட்கும் சக்தியும் மனத்துடன் ஒன்றிப் போகாத நிலையில் வேலை நிறுத்தம் செய்வதும் நம்முடைய அன்றாட அனுபவமாகும். இப்படியே பொறிகளும், புலன்களும் மனம், புத்தி, சித்தம் போன்ற உட்கருவிகளும் சேர்ந்து தொழிற்படாத பொழுது நாம் முழுமையான அறிவைப் பெறுவதில்லை.

இந்தக் கருவிகளின் இயக்கமே நமக்கு அறிவையும், அனுபவத்தையும் சேர்த்துக் கொடுப்பதுதான். வெளிப்புறத்தை நோக்கி நம்முடைய கருவிகள் செயல்படும் பொழுது நமக்கு வெளிப்புறத்திலுள்ள பொருள்களின் மீதான அறிவு கிடைக்கின்றது. இதை விஷயானுபவம் என்பார்கள். நமது பொறிகளும், புலன்களும் சதா வெளிப்புறத்தை நோக்கிச் சென்று விவரங்களைச் சேகரித்து, நமது உட்கரணங்களுக்குத் தருகின்றன. நாம் நம்முடைய கருவிகளின் இயக்கத்தில் ஊறிப்போய் விடுகிற காரணத்தால், அதையே இயல்பான நிலை எனக் கருதுகிறோம்.

வெளிப்புற விஷயங்களையே நாம் நமது கருவிகள் மூலம் பற்றிக் கொள்வதால், நமக்கென்று ஒரு உட்புறம் இருப்பதை நாம் அறிந்து கொள்வதில்லை. நாம் கனவு காணும்பொழுது நமக்கு கிடைப்பது உட்புற அனுபவம். உட்புற அனுபவம் பெறுவதற்கு நாம் உள்நோக்கிப் பார்க்க வேண்டும். உள்நோக்கி பார்த்தலாவது நம்மை நாமே விசாரித்துக் கொள்ளுதலாகும். நம்மைப் பற்றியும், நமது உடலைப் பற்றியும், கருவி கரணங்களைப் பற்றியும், நாம் பெற்றிருக்கும் அறிவின் தன்மையைப் பற்றியும் சிந்திக்கும் நோக்கத்துடன் நமது அறிவாற்றலை அவற்றின் மீது செலுத்துவதே உட்புறத்தை நோக்குவதாகும். விஷய அனுபவங்களின் தாக்குதல் இருக்கும்வரை, நம்முடைய கருவி கரணங்கள் உட்புறத்தை நோக்கா. அந்த நிலையில் நாம் நமது உடலையும் கருவிகளையும் பயன்படுத்தி வினைப் பொதியை வளர்த்துக்கொண்டே போகிறோம். இவ்வாறு நாம் செய்வதன் நோக்கம் இன்பத்தைப் பெறுவது, துன்பத்தைத் தவிர்ப்பது. இந்த நோக்கத்துடன் உலகத்தின் சுகதுக்கங்களில் நாம் நம்முடைய உடலையும் அதன் கருவிகளையும் முழுமையாகச் செலுத்தும் பொழுது நாம் வேறு, நமது உடலும் அதன் கருவிகளும் வேறு என்கிற உணர்வைப் பெறுவதில்லை. நாம்தான் அவை, அவைதான் நாம் என்கிற நினைப்பே தலை தூக்கி நிற்கின்றது. உலக விஷய அனுபவங்கள் நமக்கு ஒரு மலைப்பை, மயக்கத்தைத் தந்து, உண்மையை மறைத்து விடுகின்றன. நமது உடலின் கருவிகள் தத்தம் வேலையை செய்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவற்றின் இயக்கம் மயக்கம் என்கிற சூழலில் நடைபெறுகின்றது. இதை அறியாமை என்கிறோம். நமது உயிரோடு அனாதியே கலந்து வரும் ஆணவ மலத்தின் மறைப்புத் தன்மையே இதற்கு காரணமாக இருக்கிறது. அதே நேரத்தில் நாம் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். இறைவன் படைத்த படைப்பிற்கு நோக்கம் இல்லாமல் இருக்க முடியாது. இறைவன் எல்லா உயிர்களுக்கும் உடலைக் கொடுத்துப் பொறி, புலன்களைக் கொடுத்து, நமக்குஎல்லா விதமான அனுபவத்தையும் கொடுக்கின்றான். கருவிகள் மூலமாக மயக்கத்தைக் கொடுப்பவனும் அவனே. மயக்கம் தீர மருந்தைக் கொடுப்பவனும் அவனே. அதுவே அவனுடைய பெரும் கருணையாகும். 'பெருமானே! எத்தனை விதமான அனுபவங்களைப் பெற்று நான் உன்னை அடைகின்றேன்; அதுவல்லவா உன்னுடைய பெரும் கருணை!'' என்று பட்டினத்து அடிகள் நினைக்கின்றார். நாம் பெறும்

அனுபவங்கள் பல்வேறானவை. சில இன்பத்தைத் தருகின்றன. பல துன்பத்தைத் தருகின்றன. சில இறைவனை அடையும் வழிகளைக் காட்டுகின்றன. பல நம்மை இறைவனிடமிருந்து வெகுதூரத்திற்குக் கொண்டு செல்லுகின்றன. ஆனால், இவையெல்லாம் இறைவனுடைய கருணையால் நேருகின்றன என்றால் அதை ஏற்றுக் கொள்ளலாமா?

இந்த கேள்விக்கே இடமில்லை என்கிறார் காரைக்கால் அம்மையார். அறிவைப் பயன் படுத்தி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வீரும் நிலையைக் கடந்தவர் அம்மையார். அறிவு எனும் திரை அவரது கண்களை மறைக்கவில்லை. இறைவனுடைய அருளையே துணை கொண்டு மெய்ப்பொருளைஆராயும் பண்பினைப் பெற்றவர். ஆகவே அவருடைய உள்ளத்தில் வேறு வகையான அனுபவம் தோன்றுகிறது. நாம் காணும் காட்சியெல்லாம் இறைவனுடைய வடிவம் என்றும், நாம் புரியும் செயல்களெல்லாம் இறைவனுடைய அருட்பிரசாதம் என்றும் மகிழக்கூடியவர் காரைக்கால் அம்மையார். அவருடைய உள்ளம் தெளிந்த நிலையில் உடலாலும் கருவிகளாலும் கிடைக்கக்கூடிய அனுபவங்களின் தன்மை குறைந்து அவை தரும் மயக்கத்திற்கு அப்பாற்பட்டவர். எனவே

''அருளே உலகெலாம் ஆள்விப்ப(து) ஈசன்
அருளே பிறப்பறுப்பது; ஆனால்-அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு.''
(அற்புதத் திருவந்தாதி)

என்று கூறுகின்றார்.

எங்கும் எதிலும் எப்பொழுதும் இறைவனது அருள் தோய்ந்து நிற்கும். இதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் நமது உயிருடன் அநாதியே கலந்து வரக்கூடிய ஆணவ மலம்தான். இது உயிர்களைச் சேர்ந்த குற்றமாகும். ஆணவ மலம் மெய்ப்பொருளை உயிரிடமிருந்து மறைக்கின்றது. நமது கண்களை மறைக்கும் இருளைப் போன்ற தன்மையுடையது. ''இருள் ஒளிர இருண்ட மோகம் ஆய்'' என்கிறது சிவப்பிரகாசம். நாம் இருண்ட இடத்தில் இருக்கும்பொழுது இருளைப் பற்றிய நிலையை உணர்ந்து கொள்கிறோம். ஆனால் ஆணவ மலம் தன்னையும் காட்டிக்கொள்வதில்லை. மெய்ப்பொருளைப் பற்றிய உண்மையையும் மறைக்கின்றது. ஆகவே, ஆணவ மலம் இருளிலும் கொடியது என்கிற பொருளுடன் சிவப்பிரகாசம் பேசுகிறது.. ஆணவ மலம் மூல மலம் என்பது சித்தாந்தக் கோட்பாடாகும். இது அநாதி முதல் உயிருடன் சேர்ந்து இருப்பதன் காரணத்தினால் இது சகஜ மலம் என்றும் சொல்லப்படுகிறது. ஆணவ மலம் உயிரின் அறிவு முழுதினையும் மறைக்கும் என்று கூறுகிறது சிவப்பிரகாசம். அதே நேரத்தில் ஆணவ மலம் உயிரினுடைய குணமாகாது. உயிரினுடைய குணம் அறிவேயாகும். ஆணவ மலம் ஒரு சடப்பொருள். உயிரின் குணம் சடமாக ஒருபொழுதும் இராது. உயிரின் தன்மையான அறிவை எவராலும் அழிக்க இயலாது. அநாதியிலே உயிர்களை அணுத்தன்மைப்படுத்தி நிற்பதனால் இம்மலம் ஆணவமலம் எனப்படலாயிற்று. அதன் விளைவாக உயிரானது தன் நிலையிலேயே நின்று பிறவற்றை வேறுபடுத்திப் பார்த்து உயிருக்கு உயிராக நிற்கும் இறைவனைப் பார்க்காது, பார்முதல் பூதங்களின் சேர்க்கையினால் கிடைக்கும் அவத்தைகளில் மூழ்கி பரத்தை மறந்து நிற்கும்.

---

காலையில் எழுந்து கண்களைக் கசக்கிக் கொண்டே என்னுடல், என்பொருள், என் மனைவி, என் மக்களென சுயநலம் கொண்டு பாடுபடக் கூடாது.

என் ஊர் என் நாடு என் உலகென அனைவருக்குமாக உழைப்பதுவே ஆனந்தம், பேரின்பம், பெருஞ் சொர்க்கம்.

—மகான் பசவர்

---

இங்கேதான் இறைவனுடைய கருணை தெரிகின்றது. உயிர்களுடைய அறிவு முழுவதும் ஆணவத்தால் கட்டுண்டு செயலற்று கிடக்குமாயின் அவைகளுடைய அறிவு என்றுமே விளக்கம் பெறாமல் போய்விடும். உய்தி பெறுவதற்கும், இறைவனுடைய திருவடிகளை உணருவதற்கும் வாய்ப்புகள் கிட்டாமலும் போய்விடும். உயிர்களுக்கோ ஆணவ மலத்தின் தன்மையைக் குறைப்பதற்கு ஆற்றல் இல்லை. உயிர்களுடைய அறிவாற்றல் செயல்பட வேண்டுமென்றால், அதற்காக உயிர்கள் இச்சைப்பட வேண்டும். செய்வதற்கான செயல்களைப் பற்றி அறிவு கிட்ட வேண்டும். செயல்களைப் புரியும் ஆற்றலும் வரவேண்டும். இந்த ஆற்றல்களைத் தானே இயக்கிக்கொள்ள கூடிய திறமையும் உயிர்களுக்குச் சொந்தமாகக் கிடையாது. இந்த நிலையில்தான் செயலற்றுக் கிடக்கும் உயிர்களிடம் இறைவன் தனக்கான முழு இரக்கத் தன்மையினால் கருணை காட்டத் தொடங்குகின்றான். அதுவே இறைவனின் அருள் இயல்பு ஆகும்.

இறைவன் உயிர்களுக்கு மாயையாகிய உடலையும், கருவி கரணங்களையும் கொடுத்து அருளுகின்றான். உயிர்களை அவற்றுடன் சேர்த்து உயிர்களை இயக்கச் செய்கின்றான். இன்பம் பெறுவதற்குரிய பிறவியைத் தந்தருளுகின்றான். அந்தப் பிறவியிலேயே இன்பத்தோடு துன்பங்களைத் தரக்கூடிய பந்த பாசங்களை உயிர்களுக்கு அமைத்து அருளுகின்றான். வினைகளைச் செய்ய வைக்கின்றான். உடலின் கூறுகளெல்லாம் வினைகளைப் புரிவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக உயிர்கள் பல பிறவிகள் பெற்றெடுத்து, மல பரிபாகம் நிகழ்த்தி, தூய்மைப்பட்டு முக்தி நிலையை அடையச் செய்வதும் இறைவனுடைய பேரருளாகும்.

''இன்பப் பிறவி யிடத்தை இறைவனுந்
துன்பஞ்செய் பாசத்துயருள் அடைத்தனன்

என்பிற் கொளுவி இசைந்தூறு தோற்றசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே''

(திருமந்திரம்.......432)

உயிர்கள் பக்குவம் பெற மாயையும் கன்மமும் தேவைப்படுகின்றன. உயிரின் அறிவை மறைத்து நிற்பது ஆணவம். ஆகவே இது இருளாகும். அந்த இருளைச் சிறிது சிறிதாக போக்கி உயிரானது உடல் கருவிகள் மூலமாக சுயானுபவம் பெற உதவுவது மாயையாகும். மாயை உயிருக்கு விளக்கம் தருகின்றது. எனவே சிவப்பிரகாசம் மாயையை ஒளி எனவும் குறிப்பிடுகிறது. மாயையுடன் கலந்த உயிர் ஒருவித மயக்கத்தைத்தெளியவைப்பதுஇறைவனுடைய அருட்சக்தியாகும். பாம்பு தீண்ட ஒருவனுடைய உடலில் பாம்பின் விஷம் முழுவதும் பரவ அவன் மயக்கம் அடைகின்றான். மந்திரவாதி கருட மந்திரத்தைக் கூறி மயக்கத்தைச் சிறிது சிறிதாக நீங்கச் செய்து விஷத்தை முறிவு செய்யும் மருந்தினையும் பிரயோகிக்கின்றான். மயக்கம் தெளிந்த பின்னர் அவன் மருத்துவனைத் தெரிந்து கொள்கின்றான். பாராட்டுகின்றான். அதுபோலவே இறைவன் மாயை கன்மரீதியான மயக்கத்தை உயிர்களுக்கு அளித்து தனது அருளினால் உயிர்களை அவற்றிடமிருந்து மீளவும் செய்கின்றான். இவையெல்லாம் இறைவன் செயல் என்றுகூட நாம் உணராத அளவுக்கு ஆணவமலத்தின் மறைப்புத்திறன் செயல்புரிகின்றது. இதையும் செய்பவன் இறைவன் அல்லவா! இறைவனுடைய சக்தி இவ்வகையில் திரோதான சக்தி எனப்படும். ஒரு குழந்தைக்கு நோய் வருகின்றது. நோயைத் தீர்ப்பது தாயின் பொறுப்பாக அமைகின்றது. இந்தப் பொறுப்பினைத் தாயானவள் இயல்பாகவே நிறைவேற்றுகின்றாள். குழந்தையின் மேல் அன்பு கொண்ட காரணத்தினால் குழந்தை நோய் நீங்கி சுகம் பெற வேண்டும் என்கிற எண்ணத்துடனேயே குழந்தை அழுதாலும்,குழந்தையை சற்றுக் கட்டுப்படுத்தி,சில வேளைகளில் கொடுமையான நடத்தையுடன் குழந்தைக்குக் கசப்பான மருந்தை ஊட்டி சிகிச்சை அளிக்கிறாள். குழந்தை குணமடைந்ததும் அதைத் தூக்கி வைத்து கொஞ்சிக் குலாவுகின்றாள். முதலில் கடுமையான நடத்தையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்குத் தாயின் செய்கைகள் புரியாமல் இருக்கலாம். அவ்வாறே இறைவன் திரோதான சக்தி வழியால் ஆணவமலத்தை இயக்கி உயிர்களை அவத்தைகளுக்கு உட்படுத்தி மலபரிபாகம் அடையச் செய்து பேரருள் காட்டிக் கூட்டிக்கொள்கின்றான். ஆணவமலத்தின் மறைக்கும் சக்தியாக இயங்கிய திரோதான சக்தி மலபரிபாக நிலையில் ஒளிநிலையாக விளங்குகின்றது. திரோதான சக்தியும் அருட்சக்தியே ஆகும். திரோதான சக்தி வேறு, அருட்சக்தி வேறு என்பதில்லை. திரோபவத்தை மறக்கருணை என்றும் கூறுவதுண்டு. திருமூலர் இதை ''அரைக்கின்ற அருள்'' என்று குறிப்பிடுகின்றார். இதை ''அரிக்கின்ற அருள்'' என்று அழைத்தாலும் சிறக்கும். இறைவனின் திரோதான சக்தி உயிரைச் சார்ந்த ஆணவ மலத்தின் மறைத்தல் தன்மையை இயக்கி உயிரை கன்மம், மாயை ஆகிய மலங்களில் ஈடுபடச் செய்கின்றது. இவ்வாறு உயிரை ஈடுபடுத்தியே இறைவன் அது உய்வதற்கான பாதையை விளக்குகின்றான்.

இறைவனுடைய மறக்கருணை திரோதான சக்தியாக நின்று இருவினைப் பயனை ஊட்டுவிக்கின்றது. உயிரை பேதிக்கின்றது. உலக வழியிலே போகச் செய்கின்றது. ஆயினும் கடைசியில் இறைவனுடைய திருவடி தரிசனத்திற்கு வித்திடுகிறது. ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளையாள் பாதத்திறம் பாடி ஆடேலோர் எம்பாவாய்'' என்கிறார் மணிவாசகப்பெருமான்.

இதே திரோதான சக்தியை அருட்சக்தியாக்கி நமக்கு உதவுவதும் இறைவனாகும். ஆணவ மலம் உயிர் மெய்யறிவைப் பெற முடியாதவாறு ஒரு மறைப்பினைச் செய்கிறது. உயிர் இறைவனருள் பெற்றவுடன் இந்த மயக்கமானது நீங்குகிறது. மறக்கருணை இறைவன் திருவருளால் அறக்கருணையாக மாறுகிறது. இதை ''கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம்'' என்பார் சேக்கிழார் பெருமான். கண்ணப்ப நாயனார் சரிதத்தில்நாயனார் காளத்திநாதரை காணும் நேரத்திலேயே மறக்கருண்ணை அறக்கருணையாக மாறும் ஒரு ஒப்பற்ற நிகழ்ச்சியைக் காண்கின்றோம். காளத்திநாதரின் கருணைகூர்ந்த அருள்திரு நோக்கம் கண்ணப்ப நாயனார் மீது பதிந்த மாத்திரத்திலேயே தத்துவங்கள் என்னும் பெருகுசோபானத்தை நாயனார் கடந்தவரானார். அநாதியே தொடர்ந்து வந்த நாயனாரைச் சார்ந்து நின்ற மலங்கள் அவரை விட்டு நீங்குகின்றன என்கிறார் சேக்கிழார்பெருமான். கண்ணப்பநாயனார் ஒப்பற்ற அன்பு உருவமாயினார். அன்பே சிவமாதலால் நாயனாருடைய தவத்தினால் தூய்மை பெற்ற உயிரானது சிவமாம் தன்மையைப் பெற்றது.

''திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்த்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய வொளியின் நீழற் பொருளில் அன்பு ருவ மானார்''.

(திருத்தொண்டர் புராணம்...753)

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகப் பெருமான் ஞானகுருவைக் கண்டு சரணடைந்த மாத்திரமே அருளுணர்வினைப் பெறுகின்றார். உயிர் வாழ்க்கை வெறுத்தது. தனது சொந்த முயற்சியின்றி இறைவன் தன் உள்ளத்தின் இருளை மாற்றி ஒளியினைத் தந்த பாங்கினைக் கண்டு வியக்குகின்றார்.

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவ பெருமான்

தானேவந் தென துள்ளம் புகுந்தடியேற் கருள்
செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே
வெறுத்திடவே'

(திருவாசகம்...553)

திரோபவம் நீங்குவதும் அருளுணர்வு பிறப்பதும் இறைவனின் செயல்களாகும். ஒன்று மறைந்து மற்றது தோன்ற பிறக்கும் தெளிவில். உலகமெனும் நாடக மேடையில் நாம் நடிக்கும் நாடகம் உயிரின் உய்திக்கு உத வாது என்னும் அறிவு உருவாகிறது. சித்தவி கார கலக்கம் திரோபவ நிலை. இறையருளே அதை தெளிவிக்கவும் செய்யும்.

''வைத்த நிதி, பெண்டிர், மக்கள், குலம் கல்வி
என்னும்
பித்த உலகில். பிறப்போடு இறப்பு என்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவற்கே-சென்று-ஊதாய்; கோத்
தும்பீ''

(திருவாசகம்....220)

அருளாளர்கள் உள்ளொளி பெற்றவர்கள். ஆணவமலத்தின் மறைத்தலாகிய சக்தியின் வலிமை குன்றி, அகத்தே சிவ ஒளி விளங்கி நிற்கும் தன்மையைப் பெற்றவர்கள். ஞானப் பால் உண்டு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்றவர் திருஞானசம்பந்தர். அவர் இப்பிறவியில்தான் சிவஞானம் பெற்றார் என்பதில்லை, ஆளுடைய பிள்ளையார் சீர்காழியில் பிறக்கும் முன்னரும் இறையடி வழுவாத பண்பினராக இருந்தார். ஆயினும், இறைவன் ஒருவகை மயக்கத்தைச் செய்தவன் என்றும் அவனே பிள்ளையாரை இப்பிறவியில் மண்ணில்மேல் பிறக்குமாறு காட்டினான் என்றும் ஞானசம்பந்தப் பெருமான் அருளுகிறார். இந்தக் கருத்துடன் திருத்துருத்தியில் ஆளுடைய பிள்ளையார் பாடிய திருப்பதிகம் சிந்தனைக்குரியது.

''துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் நின்
னடி
மறக்கிலாத என்னை மையல் செய்திம் மண்
ணின் மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு
விட்டு
இறக்குமாறு காட்டினாய்க்கு இழுக்கின்றது
என்னையே''

''என்னை மையல் செய்து இம்மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினாய்'' என்கிறார் திருஞானசம்பந்தர். ''ஏன் அவ்வாறு செய்தாய்?'' என்று இறைவனை கேட்பது போலவே இது அமைந்துள்ளது. திருஞானசம்பந்தப்பெருமானுக்கு முற்பிறவியிலும் இப்பிறவியிலும் இறைவனைப் பற்றி மயக்கமில்லை. ஆயினும், இறைவன் தன்னை மையல் செய்தான் என்கிறார். பெருமானின் வியப்பினை இது காட்டுகின்றது. இறைவன் தனது மறைப்புச் சக்தியில் சிறிதைக் காட்டியுள்ளான். ஆனால் ஞானசம்பந்தர் தமக்கு இவ்வாறு செய்ததை ஒரு குற்றமாகக் கொள்ளவில்லை. இம்மண்ணிற் பெருமானுக்கு திருநெறியாகிய திருத்தொண்டினைப் புரிய வேண்டிய பொறுப்பு இருந்த காரணத்தால் பெருமானை இவ்வுலகிற்கு வரவழைத்து அவர் அப்பணியை மேற்கொள்ளுமாறு அருள் புரிகின்றான் என்பதே சான்றோர்களின் கருத்தாகும்.

ஆசைமிகக் கொண்டவர் விலங்கு
அன்புமிகக் கொண்டவர் மனிதர்
அருள்மிகக் கொண்டவர் தேவர்

—டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

திருவருள் வரப்பெற்று இறையுணர்விலே திளைக்கும் அடியார்களுடைய உள்ளம் முழுமையும் இறைஞானம் நிரம்பப்பெற்றிருக்கும் காரணத்தினால், அவர்களுடைய கருவி கரணங்கள் இறைவனுடைய சித்தத்தின்படியே செல்கின்றன. மலங்கள் நீங்கிய நிலையில் உயிரானது கருவி கரணங்களை இறைவன்பால் இயல்பாகவே செலுத்துகின்றன.

''தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடும்;
தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடும்;
தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்;
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே''

(திருமந்திரம்...139)

சிவமாம் தன்மை பெற்ற உயிரானது எங்கும் எதிலும் சிவப்பரம்பொருளையே காண்கிறது. இறைவனுடைய மறைப்புச் சக்தி ஆணவமலத்தின் மூலமாக செயல்படும்பொழுது ஊனக்கண்ணானது பலவற்றைக் கண்டாலும் தன்னையும் தனது தலைவனையும் தெரிந்து கொள்வதில்லை. ''காட்டிய கண்ணே தனைக் காணா; கண்ணுக்கு காட்டிய உள்ளத்தை கண் காணா;காட்டிய உள்ளம் தனைக்காணா'' என்பது மெய்கண்டதேவரின் திருவாக்கு. உள்ளத்தில் இருள் நீங்கி ஒளிபெற்ற பின் கண்ணானது அகத்திலும் புறத்திலும் பரம்பொருளின் பேரியக்கத்தை காணும் ஆற்றலைப் பெறுகிறது. ''மறைத்தலைச் செய்கின்ற இறைவன் என்னோடு உடனாய் நிற்கின்ற அருள் தொடர்பினை என் உள்ளத்திலே உணர்ந்துகொண்டேன். எனவே, அவன் எனது உள்ளும் புறமும் நிரம்பி அருள்செய்துகொண்டே இருப்பான். அதை நீங்கள் தெரிந்துகொண்டீர்களானால் நீங்களும் இறைவனை உள்ளத்தில் வைத்து வெளியே புறப்பட்டு ஓடாது நிறுத்திக்கொள்ளலாம்'' என்று கூறுவார் திருமூலர்.

# திருக்குடநீராட்டு விழா காணவிருக்கும் திருக்கழுக்குன்றம்

முதுபெரும் புலவர் வேதாசலம் (3)

## வசுக்கள் எண்மர் வழிபட்டது

பொன்மயமான மேருமலைச் சாரலில், வசிட்ட முனிவரால் ஆதரிக்கப்படுவதாகிய காமதேனு, பசுக் கூட்டங்களுடன் மேய்ந்து கொண்டிருந்தது. காமதேனு மிகவும் அழகுடன் விளங்கியது. பசுக்கூட்டங்களிடையே இருந்த அவ்வழகிய காமதேனுவை வசுக்கள் எண்மரும் அவர் தம் மனைவியரும் கண்டனர்.

வசிட்டமுனிவர் நினைத்தபடி எல்லாம், நல்ல தவப்பயன் போலக் கொடுத்துக் கொண்டிருக்கும் காமதேனுவின் ஆற்றலையும் அக் காமதேனுவைப் பெற்றிருக்கும் வசிட்ட முனிவரின் அருந்தவத்தையும், அம்முனிவருக்கு அக் காமதேனுவைத் தந்தருளிய உமையொருபாகரின் கருணையையும் புகழ்ந்தனர்.


வசுக்களில் இளைய வசுவின் மனைவியாகிய மாலினி என்பவள் தன் கணவரிடம் அக் காமதேனுவின் பாலைக் கறந்துண்ணும் விருப்பம் தனக்கு மிகுவதைக் கூறினாள். அவளிடம் கொண்ட காமத்தால் அவ்விளையவசு அவள் விருப்பத்தை நிறைவு செய்ய காமதேனுவின் மார்பகத்தை வலியப்பற்றினான். காமதேனு ''இவன் நம்மைப் பிறர் பொருள் என்றுணரவில்லை. வசிட்ட முனிவரின் அருளைப் பெறவும் இல்லை. நம்மை இரந்து கேட்டுக்கொள்ளவும் இல்லை. இவன் செய்யக்கூடாத செயலை செய்தான்.'' என்று நீங்கி, அவனைச் சினத்துடன் நோக்கி, ''நடுநிலைமை நீங்கிய செயலைச் செய்த நீயும், குற்றமான செயலை நீ செய்வதனைத் தடுக்காத உன் தமையன்மார்களும் வருத்தம் தரும் வறுமையுற்றுக் காசிச் சுடலையில் அடுக்கும் பிணத்தினைப் புசித்துக் கொண்டிருங்கள்'' என்று சபித்தது. அதனைக் கேட்ட வசுக்கள் அஞ்சி காமதேனுவை பணிந்து இளையவன் செய்த தீமையால் நேர்ந்ததனைப் பொறுத்து அருளும்படி வேண்டினர். காமதேனு பாபம் வந்தடையும் வழிகள் பலவற்றையும் கூறி, ''தன் மனைவியின் ஏவலைக் கடந்திலனாய் உங்கள் பின்னவன் பண்பில்லாத செயலைச் செய்ததால் நீங்கள் பூலோகம் போகும்படி சபித்தேன். இந்தச் சாபம் அனுபவித்தல்லாமல் தீராது. நீங்கள் காசிச் சுடலையில் வலிய பிணத்தினைப் புசித்து நூறாண்டு கழிந்து பிறகு அவ்விடம் வரும் நாரத முனிவர் சொல்லின் வழி நடந்தால் உங்கள் துன்பம் நீங்கும்'' என்று கூறிச் சென்றுவிட்டது.

பிறகு வசுக்கள் எண்மரும் காசிச் சுடலையில் பிணக்குவியல்களையுண்டு நூறாண்டு கழித்தனர். நாரதமுனிவர் பெருந்தவம் நிறைந்த காசியில் விசுவநாதரைப் பணிந்து செல்லும் அளவில் வசுக்கள் நாரதரைக் கண்டு வழிபாடு செய்து துதித்தனர். நாரதர் அவ் வசுக்களில் இளையவசு செய்த செயலையும் காமதேனு அளித்த சாபத்தினையும் உணர்ந்து தம் கமண்டலத்தில் இருக்கும் நீரை அவர்கள் மீது வீசித் தெளித்தனர். தெளித்த அளவில் அவ்வசுக்கள் சாபம் நீங்கி முன்னிருந்த மேனி பெற்றார்கள். இவ்வசுக்கள் தாங்கள் மகிழ்ச்சியின்றிப் பிணங்களையுண்ட பாபத்தைக்குறித்து மனம் அஞ்சி அருகில் வந்து பலமுறை தொழுதார்கள்.

நாரதர் அவர்களுக்குத் தத்துவ விளக்கம் பலவற்றைக்கூறி ''உயிர்கள் செய்த தீவினை யாவும் சிவபெருமானைப் பூசித்தால் தீயில் பட்ட சருகுபோல் மாய்ந்தொழியும். சிவபெருமானை வழிபடுந் தலங்களில் சிறந்தது எனத் தேவர்களுக்குப் பரமசிவத்தால் எடுத்தியம்பப் பெற்றது வேதகிரித் தலம். அந்த வெற்பில் தவம் செய்யும் மார்க்கண்ட முனிவரை அணுகுங்கள்'' என்று அவ்வசுக்களை அழைத்துக் கொண்டுவந்து மறைமலைச்சாரலில் தவமியற்றும் மார்க்கண்ட முனிவரின் ஆசிரமத்தைக் காட்டிவிட்டு, நாரதர் வேதகிரீசனை இறைஞ்சிச் சென்றார். அவ்வசுக்கள் மார்க்கண்டரின் தாள்களை வணங்கித் தங்கள் துன்பங்களைக் கூறினர். மார்க்கண்டர் அவர்களை நோக்கி ''தீவினை செய்யாதவர்கள் யார்? இந்திரன் பிரமன் நாராயணன் முதலியவர்களும் தீவினை செய்து இத்தலத்தைப் பூசித்துப் பேறுபெற்றார்கள்'' என்று அம்மூவர்களுக்கு நேர்ந்த பாபமும் அவர்கள் இத்தலத்தில் வந்து பூசித்தமையும் கூறினர். மார்க்கண்டர் பிறகு அவர்களுக்குத் திருநீற்றின் பெருமையினையும், உருத்திராக்கத்தின் பெருமையையும் விரிவாக விளக்கி, பூசனை புரியும் வழிமுறைகளையும் ஆலயத்தினை வணங்கும் முறைமையினையும் தெளிவுபடக் கூறியருளினர். அவ்வசுக்கள் அவ்வாறே திருநீறணிந்து, உருத்திராக்கம்பூண்டு, ஐந்தெழுத்தோதி முறையே சிவபெருமானைப் பூசித்துத் தங்கள் தீவினை நீங்கப் பெற்றுத் தம்மிடம் போய்ச் சேர்ந்தார்கள். அன்று முதல் இப்பகுதிக்கு 'வசுவபுரம்' எனும் பெயரும் உண்டாகியது.

## தினகரர் வழிபட்டது

வைகருத்தன், விசுவரன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலகப்பிரகாசன், சாக்கி, சுவிக்கிரமன், ஆதித்தன், சூரன், அஞ்சுமாலி, தினகரன் ஆகிய கதிரவர்கள் பன்னிருவரும் தினங்களையுண்டாக்குவதில் நான் வல்லவன் நான் வல்லவன் என்று தம்முட் பிணக்குற்று பிரமதேவரை அடைந்தனர். பிரமதேவன் சிவபெருமானைத் தியானித்து அவர் திருவருள் குறிப்பையுணர்ந்து பன்னிரண்டு மாதங்களில் மாதம் ஒருவராக நாள் செய்யுமாறு கட்டளையிட்டனுப்பினார்.



அவர்கள் அவ்வாறு உதிக்கையில் கிழக்கு மலையில்தோன்றி ஓழியாமல்போர் செய்கின்ற மந்தேகர் முதலிய அவுணரால் தடையுண்டு மீண்டும் பிரமதேவரிடம் சென்று முறையிட்டனர். அவர் "அவ்வரக்கர்களை வெல்லும் பலம் உங்களுக்குண்டாக வேதகிரி சென்று சிவபெருமானை வழிபடுங்கள்" என்று அனுப்பினார். அப்பன்னிருதினகரரும் வேதகிரியடைந்து சிவபெருமானைப் பூசித்தனர். இடபவாகனத்தில் பெண்ணினல்லாள் எனும் பார்வதியுடன் கோடி சூரியர்களின் ஒளியை ஒத்து சிவபெருமான் எழுந்தருளினார். அவர்கள் சிவபெருமானின் ஒளிவெள்ளத்தில் மூழ்கிப் பணிந்து, தாங்கள் உதிக்காவண்ணம் தடுக்கும் அரக்கர்களுடைய வலியைத் தடுக்கத்தக்க வரம் அருளுமாறு வேண்டினர். சிவபெருமான், " இந்த வேதகிரிக்கும் நமக்கும் திருமேனி வேறில்லை. இவ்வேதகிரியுடன் நம்மை உள்ளத்தில் இருத்திக்கொள்ளுங்கள்; அரக்கர்கள் உங்களுடன் போர் செய்ய அஞ்சுவார்கள்" என்றருள் செய்து, பார்வதியுடன் சிவலிங்கத்தில் எழுந்தருளினார். சூரியர் பன்னிருவரும் தினங்களைச் செய்து இருளைப்போக்கி உலகத்தைக் காத்து வந்தனர். அன்று முதல் இப்பதிக்குப் 'பரிதிபுரி' எனும் பெயரும் உண்டாகியது.

## முனிவர் பாணினியம் உணர்ந்தது

பாணினியம் என்னும் வியாகரணத்தை முறையாக அறிய, பல முனிவர்கள் தில்லையில் கூடி இருந்தனர். ஆதிசேடன் செருக்குடன் தான் பதஞ்சலியாம் வடிவெடுக்கும் போது அவர்களுக்கு அவ்வியாகரணத்தை விளக்குவதாகச் சிவபெருமானிடம் கூறினன். சிவபெருமான் யாதொன்றும் கூறாது தலையசைத்தனர். அதுவே கட்டளை என ஆதிசேடன் கருதி பதஞ்சலியாம் வடிவெடுத்தபின் அம்முனிவர்களுக்குப் பலகாலம் கூறியும் அவர்களுக்கு விளங்காமையால் சிவபெருமானை நோக்கி நெடுநாள் தவமியற்றினர். பரமசிவம் அவர்கள் முன் தோன்றி, "அகரமுடன் உகரமாகிய பரவிந்துநாதத்தில் குற்றம் அறக்கலந்திருக்கும் தலம் வேதகிரி. வேதகிரியின் சிகரம் பிரணவத்தின் சொரூபமாகும். நீங்கள் அவ்விடத்திற்குச் செல்லுங்கள்" என்று கூறியருளினார். அம்முனிவர்கள் அவ்வாறே வேதகிரியை அடைந்து பூசைசெய்து தவமும் இயற்றினர். எம்பெருமான் அவர்கள் உள்ளத்தில் தோன்றிப் பாணினியத்தின் பொருளைத் தெரிவித்து அவர்கள் வேண்டும் வரமும் தந்தருளினார். அன்று முதல் இத்தலத்திற்கு முனிகணப்புரி' எனும் பெயரும் உண்டாகியது.

## பார்வதி திருமணம்

இமயமலைமன்னன், பார்வதி சிவபெருமானுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பி, சிவபெருமானின் சம்மதம் பெற ஏழு முனிவரையும் வேதகிரி மலைக்கு அனுப்பினார். அம்முனிவர்கள் வேதகிரியின் உச்சியில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி மலையரையன் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். பரமசிவனார் உலகம் உய்யும் பொருட்டுத் திருமுடியசைத்தருளினார். ஏழு முனிவர்கள் மலையரசனுடன் அளவளாவி முகூர்த்த நாள் நியமித்த அளவில் இந்திரன், பிரமன், திருமால் முதலியவர்களும் தேவர்களும் யாவர்களும் வேதகிரியில் வந்து குழுமினர். முகூர்த்தம் குறித்த நாளில் யாவரும் புடை சூழ வேதகிரிப்பெருமான் இமயமலைக்கு எழுந்தருளி உலகுய்யப் பார்வதி தேவியை மணமுடித்து, பார்வதி தேவியாருடன் வேதகிரித்தலத்தையடைந்து யாவருக்கும் அருள் பாலித்தார். (இத்தலத்தில் வருடம் மூன்று திருமணவிழா நடைபெறுகிறது.)

---

## பதினெட்டாம் படி தத்துவம்

பதினெட்டுப் படிகளும் பதினெட்டு தத்துவங்களாகும். அவையாவன: புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனது, புத்தி அகங்காரம் மூன்று. இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காண இயலும். அதாவது சபரி மலை சென்று ஐயனைக் காணவரும் பக்தர்கள் இந்த பதினெட்டு தத்துவங்களையும் மனதில் உருவேற்றி, வாழ்வில் கடைப்பிடித்து வந்தால் ஐயனை நேரில் காண முடியும் என்பது உட்கருத்து. இத்தத்துவத்தை மனதில் கொண்டு தவமியற்றி, நல்நெறி கடை பிடிக்க வேண்டும் என்பது இந்த பதினெட்டுப்படிகளின் தத்துவமாகும்.

ஐயப்பன் காட்டு வழியில் யாத்திரை செய்கையில் சரங்குத்தி ஆல் என்னும் அரச மரத்தினடியில் அமர்ந்து சில உபதேசங்களை பக்தர்களுக்கு அருளினார்.

அவர் உபதேச மொழிகளாவன;

"பற்றற்ற தருமம் செய்வோமானால் மனம் மாசுபெறாது; தூய மனத்தில் ஞானம் ஒளிரும்; ஞானம் வாழ்வில் லட்சியம்; நம் தருமத்திற்கு இடையூறாவது காமம். வெகுளி பேராசை முதலியன; இவற்றை அழிக்க தியானம் வேண்டும்; தியானத்தில் மனம் நிலை பெறும்போது சாந்தி ஏற்படுகிறது. உலக இன்பத்தை மறந்து இறைவனைச் சரணாகதியடையதே பக்தியின் இறுதி மொழி."

---



# கந்தவேள் கதை

டாக்டர் திருமுருக **கிருபானந்த வாரியார்**

## [36]

அருளுருவாகிய எம்பெருமான் புன்முறுவல் பூத்து, ''மிகுதியான ஆற்றலும், எண்ணில்லாத படைகளையும், அழியாத இயல்பையும் உடையோம் என்று ஆணவம் கொள்ளாதே. எல்லாவற்றையும் விரைவில் வெல்வோம் என்று அறியாமையால் எண்ணுகின்றாய். சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஒரு பொறிதான் உலகங்கள் எல்லாவற்றையும் அழிப்பது. நூற்றெட்டு யுகம் சிறந்து வாழும் உன்னுடைய வலிமை முழுவதையும் இப்பொழுதே அழிப்போம்'' என்று மொழிந்தார்.

எம்பெருமான் கூறியதைக் கேட்ட சூரபன்மனுக்குக் கோபம் பொங்கியது; அவனது கண்கள் அக்கினி ஜ்வாலையைக் கக்கின. தனது பெரிய வில்லை வளைத்தான். கந்தவேள் ஒரு பெரும் வில்லை வளைத்து நாணொலி செய்தார். அண்டங்கள் யாவும் உடைவது போன்ற பெருமுழக்கம் ஏற்பட்டது.

சூரனுக்கும், சுவாமிக்குமிடையே போர் தொடங்கியது. சூரபன்மன் கோடி பாணங்களைத் தொடுத்தான். அந்தப் பாணங்களினால் எம்பெருமானும், அவரது தேரும் அரைக்கப்பட்டது. முருகப் பெருமான் விடுத்த பாணங்கள் சூரபன்மனின் பாணங்களை அழித்தன. சூரபன்மன் நஞ்சு தோய்ந்த பாணங்களை விடுத்தான். அப்பாணங்களையும் அழித்தார் சுவாமி. சூரபன்மனின் தோள்களை நோக்கிப் பதினான்கு பாணங்களை விடுத்தார். அவை, சூரபன்மன் தோள்களைத் துளைக்கவில்லை. மாறாக ஒடிந்து வீழ்ந்தன. அவனது வச்சிர உடலின் வலிமையைக் கண்ட எம்பெருமான், ஆயிரம் பாணங்களை விடுத்து வில்லை ஒடித்தார். சூரபன்மன் பிரமதேவர் அளித்திருந்த அயிற்படையை விடுத்தான். அதனை அழித்தார் சுவாமி.

பின்னர், சூரபன்மனின் தேரையும், அவனுக்கு உதவியாக வந்திருந்த பதினான்கு லட்சம் தேர்களையும் சிதைத்து அழித்தார். முருகப் பெருமானது வல்லமையைக் கண்ட சூரபன்மன் முத்தலைச் சூலம் ஒன்றை எடுத்து அவர் மீது வீசினான். அதனைப் பாணங்களினால் வீழ்த்திய எம்பெருமான், சூரபன்மனின் தேரின் குடையையும், அவனது மகுடத்தையும் அவனது நெற்றியிலிருந்த வீரப் பட்டயத்தையும் அழித்தார். சூரபன்மனுக்கு ஏற்பட்ட பரிதாப நிலையைக்கண்ட அவனது வீரர்கள் முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டு கொடிய போர் செய்தனர். முருகப் பெருமான் தம் திருக்கரத்திலிருந்த சக்கராயுதத்தை ஏவினார். அந்த சக்ராயுதம் அசுரர்களின் சிரங்களை அறுத்தும், கரங்களைத் துண்டித்தும் சூரபன்மனின் நூறாயிரம் வெள்ளம் சேனைகளையும் அழித்துவிட்டது.

இப்படியாக எம்பெருமானுக்கும், சூரபன்மனுக்கும் நீண்ட நேரம் போர் நடந்தது.

போர்க்களத்தில், இறந்த படைகளின் உடல்கள் மலைபோல் குவிந்துவிட்டன. பேய்க் கூட்டங்கள் நடமாடின.

தன் படைகள் எல்லாம் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் இவைகளை யெல்லாம் இந்தச் சிறுவன் எவ்வாறு அழித்தான் என்று வியந்தனன். மீளவும் போர் செய்யத் தொடங்கினான். முருகப் பெருமான் மீது நான்முகன் படைக்கலத்தை ஏவினான்.

மேகம் போன்ற சூரபன்மன் பிரமாத்திரத்தை விடுத்தான். அந்தப் பெருமை தங்கிய வலியபாணம் முருகனுடைய அருகில் சென்றது. சென்றதும் எம்பிரான் கரத்தில் இருந்த வேலாயுதம் அப்பிரமாத்திரத்தை விழுங்கிவிட்டது.

''சூர்ப்புயல் அன்னதோர் சூரன் விடுக்கும்
மாற்படு போதன் வயப்படை சென்று
பாற்படும் எல்லை பரஞ்சுடர் செங்கை
வேற்படை சென்று விழுங்கிய தன்றே''.

பின்னர் திருமால் படைக்கலத்தை ஏவி னான். சூரபன்மன் விடுத்த நாராயண அஸ் திரம் பலப்பல விஷ்ணு வடிவங்களைக்கொண்டு சென்றது. முருகப்பெருமானுடைய திருக் கரத்தில் இருந்த வேல் சென்று, அந்தப் படை யையும் விழுங்கியது.

''விட்டிடு மாயவன் வெம்படை ஏகி
மட்டறு கண்ணர்தம் மாலுரு ஈன்று
கிட்டிய காலை கிளர்ந்திடும் ஒள்வேல்
அட்டது தன்னையும் ஆர்ந்தது மன்னோ''.

சூரன் சிவப் படைக்கலத்தை வழிபட்டு விடுத்தான். அது மிகவும் ஆரவாரம் செய்து கொண்டு யாவரும் நடுங்க வந்தது.


''எந்தைதன் மாப்படை ஈதென ஐயன்
சிந்தை புரிந்தொரு செங்கையை நீட்டி
வந்திடும் அப்படை பற்றினன் மாதோ
தந்தவன் வாங்கிய தன்மையதென்ன''.

முருகப் பெருமான், இது எமது பிதாவி னுடைய பாணம் என்று கருதி, தமது திருக் கரத்தை நீட்டி, தந்தவன் வாங்கிய தன்மை போல் பற்றிக் கொண்டனர்.

சூரபன்மன், தன் படைக்கலங்கள் எல்லா வற்றையும் முருகப்பெருமான் எளிதாக செய லற்றவையாகச் செய்தது கண்டு ''சிவபெரு மான் திருமகனே தான் என்பதைக் காட்டி விட்டார். என்னோடு போர் செய்ய இவர் அன்றி வேறு ஒருவரும் இல்லை, இனி இவர் வலிமையை மேலும் பார்ப்போம்'' என்று கரு திப் பேசாமல் நின்றான்.

குமாரக் கடவுள் அவனை நோக்கி ''தேவர்கள் யாவரையும் நீ அளவில்லாத காலம் சிறையில் வைத்துள்ளாய். அவர்களை விடுவிக்குமாறு உன்னிடம் ஒரு தூதன் மூலம் தெரிவித்தோம். நீ விடுவிக்கவில்லை. அதனால் நாம் இங்கு வந்தோம். தாரகனை அழித்ததை யும் மற்றும் இன்று உன் படைகளையும் படைக் கலங்களையும் அழித்ததும் கண்டாய். படை களின்றித் தனித்து நிற்கும் உன்னை அழிப்ப தும் சரியல்ல என்று கருதுகின்றேன். தேவர் சிறையை நீக்க இன்னும் மறுப்பையேல் உன்னை இப்பொழுது கொல்லுவோம். உன் எண்ணத்தைக் கூறுவாயாக'' என்றான்.

''பன்னு கின்றதென் பற்பல விண்ணுளோர்
பலரும்
துன்னு தொல்சிறை விடுத்தியேல் உன்னுயிர்
தொலையேம்
அன்ன தன்மையை மறுத்திடின் ஒல்லைநாம்
அடுதும்
என்னை கொல்உன தெண்ணங்கள் உரைத்தி
யால் என்றான்''



சூரபன்மன் ''நான் வலியிழந்து நிற்பதால் தேவர் சிறையை நீக்கும்படி என்னிடம் இச்சிறு பாலகன் கூறுகின்றான். என்னுடைய வலி மையை அறிந்தானில்லை. நான் தனித்து நின் றாலும் என்னை இவன் கொல்லுவதும், நான் இவனை வெல்வதும் அரிது. நீண்டகாலம் போர் நிகழும். வேறு படைகளோடு பின்னர் வந்து மீளவும் போர் செய்வேன்'' என்று எண்ணி மாயமாய் மறைந்து வீரமகேந்திரபுரத் திலுள்ள தன் அரண்மனையை அடைந்தான்.

போர்க்களத்தில் சூரபன்மன் தோற்று ஓடியதைக் கண்டதும், திருமால், பிரமா, இந் திரன் முதலிய தேவர்கள் எல்லையற்ற மகிழ்ச் சியடைந்தனர். நன்றி நிறைந்த நெஞ்சத்துடன் முருகப் பெருமானை வணங்கித் துதித்தனர். ''எம்பெருமானே! தோல்வி என்பதையே அறி யாத சூரபன்மன் இன்றுதான் தேவரீரோடு போர் செய்து தோற்று ஓடியிருக்கிறான். தேவ ரீர் மட்டும் அவனைக் கொல்லவேண்டும் என்று நினைத்திருந்தால் அவன் தப்பியோடியிருக்க முடியாது. தப்பி ஓடிய அவனைத் தாங்கள் வேலினால் அழிக்க வேண்டும்'' என்று வேண் டிக் கொண்டார்கள்.

சூரபன்மன் போரில் தோற்று ஓடியதை அறிந்த பூதசேனைகளும், அவற்றின் தலைவர் களும் ஆரவாரத்துடன் கந்தப் பெரு மான் அருகே வந்தனர். '' இனி சூரபன்மனின் நகரத்து மதிலையும், அவனது அரண்மனையை யும் தகர்த்துக் கடலில் வீசியெறிவோம்'' என்று கூறி, மதிற்பக்கம் படையெடுத்துச் சென்றனர். வீரமகேந்திரபுரியை முற்றுகையிட்டனர். மதிற் சுவர்களும் கோபுரங்களும் தரைமட்டமாயின.

வீரமகேந்திரத்தின் காவலாளியான அசு ரப் படைத் தளபதி அதிகோரனுக்கும் பூதப்

படைத் தலைவர்களில் ஒருவனாகிய மேகனுக்கும் கடும் போர் நடந்தது. மேகன் அதிகோரனின் மார்பிலும் தோள்களிலும், கபாலத்திலும் ஓங்கி அறைந்தான். அதிகோரன் அலறிவிழுந்து அழிந்தான். அதன் பின்னர் பூத சேனைகள் மதிலின் முதல் வாயிலுக்குச் சென்று அங்கே வானளாவி நின்ற கோபுரத்தை அடியோடு பெயர்த்துக் கடலில் வீசினர். திருபாற்கடலில் மந்தரகிரி அமிழ்ந்ததுபோல் அந்தக் கோபுரம் சமுத்திரத்தில் அமிழ்ந்தது. அதனால் கடல் நீர் பொங்கியெழச் சூரபன்மனின் நகரத்து வீதிகள் யாவும் வெள்ளக் காடாயின. அந்த வெள்ளத்தில் மிதந்து வந்த மீன்களும் திமிங்கலங்களும் அசுரர்களை விழுங்கின.

பூதசேனைகள் மதிலின் வடபுறக் கோபுரத்தைத் தகர்த்து, நகருக்குள் நுழைந்து எதிர்த்து வந்த அசுரர்களையெல்லாம் கொன்று குவித்தார்கள். பூதசேனைகளுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. பட்டணத்துக்குள் பிரவேசிக்கும்போது தலைவனான பெருமான் அல்லவா முன்செல்ல வேண்டும் என்று கருதினார்கள். கந்தவேளை அழைத்து வருவதற்காக அவர் இருந்த இடத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.

போர்க்களத்தில் தோற்று ஓடிவந்த சூரபன்மன் தனது அரண்மனையின் அந்தப்புரத்துக்குச் சென்றான். அவனது இன்னுயிர் மனைவி பதுமகோமளை வாசம் செய்யும் மாளிகையை அடைந்தும் அவளைப் பார்க்கவில்லை; பேசவுமில்லை. உணவும் கொள்ளாது ஒருவருடனும் பேசாது, தனியாக அமர்ந்து தனக்குப் போர்க்களத்தில் நேர்ந்த அவமானத்தையெல்லாம் எண்ணி மனம் குமுறிக் கொண்டிருந்தான்.

சூரபன்மன் போரில் தோற்று வந்த செய்தியைத் தூதர்கள் மூலம் கேட்ட பானுகோபன் துடிதுடித்து, மனம் புழுங்கினான். சூரபன்மன் இருக்கும் இடத்துக்குச் சென்று தந்தையை வணங்கினான். ''நீங்கள் ஏனப்பா யுத்தத்துக்குச் சென்றீர்கள்? உங்கள் உத்தரவுப்படி நேற்று நான் யுத்தத்துக்குச் சென்று கடுமையாகப் போர் செய்தேன். நான் மோகனாஸ்திரத்தை ஏவிக் குமரனின் வீரர்களது வலிமையை இழக்கச் செய்து வெற்றிவாகை சூடிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் பார்த்து அந்தக் குமரன் என் மீது அமோகாஸ்திரத்தை விடுத்தான். அதனால் என்னுடைய மோகனாஸ்திரத்தின் வலிமை குன்றியது. வலிமை இழந்து மயங்கிக் கிடந்த அவனது வீரர்களும் தெளிவு பெற்றுவிட்டார்கள். எனினும் நான் உயிருடனிருக்கும் வரையில் அவன் என்னை வென்றுவிட்டதாகச் சொல்லமுடியுமா? இதுபோல் ஒரிரு சறுக்கல்கள் நேரிடுவது யுத்தத்தில் சகஜம்தானே? எனவே, இன்றேனும் எதிரிகளை எப்படியும் கொன்று அழித்துவிட வேண்டுமென்று நான் ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அதற்குள் தாங்களே போருக்குச் சென்றதாக அறிந்தேன்.

## வாழும் வழி

எறும்பைப் போல் பாடுபட்டுச் சேமிக்க
வேண்டும்

தூக்கணாங்குருவி போல் சொந்தமாக
சிறுவீடு கட்டிக் கொள்ளவேண்டும்

காக்கையைப் போல் உறவினர், நண்பரோடு
சேர்ந்துவாழ வேண்டும்.

— **ஆசாரக்கோவை**

அழியாத வரம் பெற்ற தாங்கள் ஒரு பாலகனுடன் போருக்குச் செல்லலாமா? நடந்தது நடந்துவிட்டது. நாளைக்கு நானே போருக்குச் சென்று வெற்றி வீரனாகத் திரும்புகிறேன். எனக்கு விடை தாருங்கள்'' என்றான்.

''மகனே ! நீ பேசுவது நமக்கு உவகை தருகிறது. எனினும் அந்தச் சரவணபவனின் ஆற்றலை நீ சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. நானும் முன்பு அவனைச் சிறுவனாகவே மதித்தேன். ஆனால் அவனுடன் போர் செய்ததிலிருந்து மும்மூர்த்திகள் சேர்ந்தாலும் அவனை வெல்ல முடியாது என உணருகிறேன். அவனுடன் எதிர் நின்று போர் செய்ய என் ஒருவனால் தான் முடியும். அந்தக் குமரனின் இரண்டாயிரம் வெள்ளம் சேனைகளுக்கும் தலைவனாக இருக்கிற வீரவாகுவை நீ தனிமையில் போருக்கு அழைத்து வெற்றி கொள். அதுவே உன் சக்திக்குத் தகுந்த செயல். இதற்காக நாளையதினமே சேனைகளுடன் புறப்படு'' என்று விடை கொடுத்தான்.

தந்தையிடம் விடைபெற்று அரண்மனைக்கு வெளியே வந்த பானுகோபனிடம் மகேந்திரபுரியின் வீரர்கள் ஓடிவந்து வணங்கினார்கள்.

''அரசிளங்குமரரே! பூதசேனைகள் திரண்டுவந்து தலைநகரை முற்றுகையிட்டு மதில்களை இடித்துத் தகர்த்துவிட்டனர். அதிகோரனையும், அசுரவீரர்கள் பலரையும் அழித்துவிட்டனர். நகருக்குள் கடல் நீர் புகுந்து வருகிறது'' என்று கூறினார்கள்.

பானுகோபன் உடனே அரும் சக்திகள் பெற்ற அசுரத் தச்சர்களை வரவழைத்து மதில்களைச் சீர்படுத்தும்படி ஆணையிட்டான். மகேந்திர ஜாலம் போல் அசுரத் தச்சர்கள் விரைவிலேயே முன்னைக் காட்டிலும் பன்மடங்கு எழிலும் வலுவும் பொருந்திய மதில்களை மகேந்திரபுரிக்குச் காப்பாக அமைத்தனர். பதினாயிரம் வெள்ளம் படைகளுக்குத் தலைவனான மகாகாயனை எல்லைக் காவலுக்கு வைத்தான் பானுகோபன்.

— **தொடரும்**




**[ 4 ]** **கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்**

மதுரையை மீனாட்சி அரசாட்சி செய்திருந்த நாளில் கல்யாணப் பருவம் அடைகிறாள். 'அம்மணி! உனக்கு இன்னும் திருமணமாகவில்லை!' என்று அன்னை காஞ்சனாதேவி கவலையுடன் கூற, ''அம்மா உன் மனோபிஷ்டம் நல்ல காலம் வந்ததும் நிறைவேறும். கவலையடையாதே'' என்று கூறி, தாய் வேறு பதில் கூறுவதற்கு முன் ''நீ இங்கேயே இரு! நான் திக்விஜயம் செய்து வருகிறேன்'' என்று புறப்பட்டுவிடுகிறாள். தந்தையில்லாத அம்மை, தாயின் மனக்கவலையை தீர்த்துவைக்கும் பொருட்டு, தனது நாயகனான சிவபெருமானையடைய திக்விஜயம் என்ற வியாஜம் கொண்டு புறப்பட்டுவிடுகிறாள் என்பது குறிப்பு. அவ்வாறு புறப்பட்ட அம்மையார் ஏழு திக்குகளையும் அடைந்து யாவரையும் வெற்றிகொண்டு வடதிசையில் கைலாயம் நோக்கி வருகின்றாள்.

மிதிலைக்கு வரும் இராம லட்சுமணரை ''எங்கள் அரசியைத் திருமணஞ் செய்து கொள்ளும் மணமகனே வா!'' வா! என்று மிதிலை தன்கையை நீட்டி அழைத்தமாதிரி இருந்தது மிதிலையில் கொடிகள் ஆடிய காட்சி என்பார் கம்பர். அம்மாதிரி கைலாய மலையில் மீனாட்சிக்கு வரவேற்பு கிடைத்தது எனக் கூறுகிறார் பரஞ்சோதி மாமுனிவர். மலை அரசனின் குமாரியான பார்வதி தன்னை விட்டுப் போனவள் மீண்டும் தன்னிடம் வருகிறாள் என்று அருவியாகிய கண்ணீர்விட்டு அந்த நீரின் ஒலியால் ''அன்னையே வா! வா!'' எனக் கைலாயம் அழைக்க அவ்விடம் செல்கிறாள் மீனாட்சி.

''வானார்' கயிலை மலையான் மகள் தன்னை நீத்துப்
போனாள் வந்தாளென்று அருவிக்கண் புனலுக் கந்நீர்
ஆனா ஒலியால் அனைவாவென்று அழைத்தன்று ஏக
தானா நகையால் தழீஇ யெதிர் யெதிர் ஏற்பச் சென்றாள்''

அவ்வாறு கைலையை அடைந்த அம்மையுடன் சிவகணங்கள் போர் புரிந்து தோற்றோடிவிடுகின்றன. இதையறிந்த நந்திதேவர் சிவபெருமானிடம் நடந்ததைக் கூற இறைவன் தானே நேராகப் புறப்படுகிறார். தேவியார் இறைவனைக் கண்டாள்; முழுவதுமா? இல்லை! தன் வலப்பாதியைத்தான் கண்டாள். இடது பாதி அம்மைதானே! அம்மையப்பர் என்றும் பிரியாதவர் என்பது குறிப்பு.

அம்மையப்பனாக வந்த இறைவனைப் பல புலவர் பெருமக்கள் பலவிதமாக அனுபவித்துள்ளனர். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தனது அகிலாண்ட நாயகி மாலையில் 'தாயே நீ கண்ணாடியில் அலங்காரஞ் செய்து கொள்ளுவதற்காகப் பார்க்கையில் வலம் இடமாகவும், இடம் வலமாகவும் தெரியும். உன் வலப்பாதி இடப்பாதியாகவும் இடப்பாதி வலப்பாதியாகவும் தெரியும். கண்ணாடியில் தெரியும் வலப்பாதியில் உன் உருவம் தெரியும். இடது பாதியில் நானிருக்கும்போது இறைவனுடைய வலது பாதியிலிருப்பவள் யார்? எனக் கோபித்துக் கொண்டுவிடாதே'' என்கிறார்.



''இறையவன் வாமத்துறையும் நீ தொழில் செய்
இமையவர் தருப்பணம் காட்ட
மறைவின் மற்றதனை நோக்கி அவ்விறைவன்
வலப்புறத்தொரு மடக்கொடி நன்கு
உறைவதென், என மற்றவனொடு பிணங்கேல்
உற்று நோக்கிடில் பிழையில்லான்
கூறை மலி களத்தன் வளத்திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே.''

வலப்புறத்தும், இடப்புறத்தும் உள்ள அழகுகளை வருணிக்கிறார் திருவண்ணாமலை புராண ஆசிரியர்.

''எடுத்த செஞ்சடை ஒருபுறம்; ஒருபுறம் அளகம்
தொடுத்த கொன்றையோர்புறம்; ஒருபுறம்
மலர்த்தொடையல்
வடித்தசூலம் ஒர்புறம்; ஒருபுறம் மலர்க்குவளை
திடத்திலார் கழலொருபுறம்; ஒருபுறம் சிலம்பு
பச்சைவண்ணம் ஒருபுறம்; ஒரு புறம் பவளம்
கச்சுலா முலையொருபுறம்; ஒருபுறம் கவின்மார்
அச்ச நீக்கிய வரதம் ஒன்று; அபயமொன்று
அங்கை
இச்சையாம் இவர் உறுதல் கண்டு இறைஞ்சி
னார் இமையோர்''.

அருணாசலபுராணம்.

இவ்வாறு அம்மையப்பனாக இருந்து, பிரிந்து மீண்டும் ஒருவரையொருவர் சந்திக்கும் போது அம்மையின் அதிக உறுப்பு மறைந்து விடுகிறது. வீராங்கனையாக வந்த அம்மை தனது மென்மையான பெண்மைக் குணங்கள் மேலிட தலைகுனிந்து நின்றுவிடுகிறாள் எனக் கூறும் அழகிய சொல்லோவியம் இதோ!

''கண்ட எல்லையில் ஒருமுலை மறைந்தது
கருத்தில் நாண்மடம் அச்சம்
கொண்டமைந்திடக் குனிதர மலர்ந்த பூங்
கொம்பரின் ஒசிந்து ஒல்கிப்
பண்டையன்பு வந்து திறைகொளக் கருங்குழல்
பாரமும் பிடர் தாழக்
கெண்டையுண்கணும் புறவடிநோக்க மண்
கிளைத்து மின்னென நின்றாள்''

சில சொற்பொழிவாளர்கள், மீனாட்சியம்மை இயல் இசை நாடகங்களாகிய முத்தமிழ்களையும் மார்புகளாகக் கொண்டு பிறந்ததாகவும், நடு மார்பாக இருந்த நாடகத் தமிழ் இறைவனது பார்வை பட்டவுடன் மறைந்ததாகவும் கூறுகின்றனர். தென்னாடுடைய சிவபெருமான் தென்மொழியில் ஒரு பகுதியான நாடகத் தமிழை அழிப்பாரா? இந்த மாதிரியான சந்தேகத்தை ஒரு சமயம் புதுக்கோட்டை காலஞ்சென்ற மகா வீத்வான் கனக ராஜனாரிடம் கேட்டேன். 'அம்மைக்குப் பர ஞானம் (கல்வியினால் ஏற்படும் அறிவு) அபர ஞானம் (வயது முதிர்ந்து இறைவனருள் பெற்று அனுபவத்தினால் ஏற்படும் அறிவு) என்ற இரண்டு மார்புகள் உண்டு. அஞ்ஞானம் என்ற (அறியாமையை) நடு மார்பாகக் கொண்டனள் அம்மை. இறைவனது அருட்கண்ணோக்கம் பெற்றால் அறியாமை அகலும் என்பதைக் காட்டவே அம்மை மூன்றாவது மார்புடன் தோன்றினள்'' எனக்கூறி கீழ்க்கண்ட பாடலையும் கூறினார்.

''உலகமெலாம் படைத்துக் காத்து அருளுகின்ற
கயற்கண்ணி உருவத்துள்ளே
இலகுகின்ற நகில் மூன்றுள் வலப்புறத்தும்
இடப்புறத்தும் இருக்கும் பாகம்
நலம் நவின்ற பரஞானம் அபர ஞானம் என
நவிலற் பாற்றாம்
விலக இடைமறைந்த தொன்றோ அஞ்ஞானம்
என அடியேன் விளம்புவனே''.

''தேவி! என்று நீ மதுரையை விட்டுத் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டாயோ அன்று முதல் உன்னைப் பிரியாது நாமும் கூட வந்

தோம். உன்னைச் சோம வாரத்தன்று மதுரையில் வந்து திருமணஞ் செய்து கொள்ளுகிறோம். மதுரைக்குப்போ' என்று கூறுகிறான் இறைவன்.

தேவியார் தாட்சாயணியாக வந்த காலத்தும் பார்வதியாக வந்த காலத்தும் திங்கட்கிழமையே திருமணம் புரிந்து கொண்டமையால் இப்போதும் திங்கட்கிழமை வருகிறேன் எனக் கூறினர் போலும்!

இவ்வாறு விடை கொடுத்த இறைவனை வணங்கி மதுரையடைகின்றாள் மீனாட்சி அம்மை. மதுரையில் திருமணம் பற்றிய செய்தி பரவுகிறது. எல்லா வீடுகளும் அலங்கரிக்கப் பெறுகின்றன. திருக்கல்யாணம் என்றைக்கு என ஒருவரையொருவர் விசாரிக்கின்றனர். வரும் திங்கட்கிழமை எனச் சிலர் கூற அந்த ஆறுநாளும் ஆறுயுகம் மாதிரி இருக்கின்றதே என்கின்றனர். மீனாட்சியின் கல்யாணத்தைக் காண்பதற்காகத்தான் நமக்கு தோள்கள் துடித்தனபோலும் என்கின்றனர். பழைய நகைகளைப் புதுப்பிக்கின்றனர். ஊரெல்லாம் ஒரே ஆடல் பாடல். அரண்மனையிலும் அலங்காரங்கள் செய்யப்பட்டு ஓமகுண்டங்கள் முதலானவை நிர்மாணிக்கப்படுகின்றன. திருமணவோலை கண்டு அரசர்கள் கூடுகின்றனர். இனிக்கைலாயத்திலிருந்து இறைவன் மணக்கோலங்கொண்டு வரும் அழகைக் காண்போம்.

அம்மை பராசக்தி மதுரை சென்ற பின் இறைவன் கைலாயத்திற்கு யாவரையும் அழைக்க இறைவனது திருக்கல்யாணத்தைக் காண மதுரை செல்லும் பயணத்தோடு

''சுரி சங்கேந்திய திரு நெடுமாலும்
வரன்முறை படைத்த நான்முகத் தொருவனும்
இன்னும்
பீடுயர் தோற்றத்துக் கோடியுருத்திரரும்
ஆனாப் பெருந்திறல் வானோர் தலைவனும்
வாம்பர் இயக்கர் தாம் பன்னிருவரும்
சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் சமனும் வருணனும் வாயுவும்
எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன்தானும்
தும்புரு நாரதர் என்று இரு திறத்தரும்''

அனைவரும் கைலாயம் வந்தடைகின்றனர். குபேரனால் அலங்காரம் செய்யப்பட்ட இறைவன் ரிஷப வாகனத்தில் மதுரை நோக்கி வரலானார். மதுரையில்

''தேவர்கள் தேவன் வந்தான்! செங்கண்மால்
விடையான் வந்தான்
மூவர்கள் முதல்வன் வந்தான்; முக்கண்
எம்பெருமான் வந்தான்
பூவலர் அயன்மால் காணாப் பூரண புராணன்
வந்தான்;
யாவையும் படைப்பான் வந்தான் என்று
பொற்சின்ன மார்ப்ப''

என்று சின்னங்கள் விருதுகளுடன் இறைவன் வருகின்றான்.

மீனாட்சியம்மையைத் திருமணம் புரிய வந்த இறைவனைக் கண்ட மக்கள் ''இந்த அழகனைத் திருமணம் செய்து கொள்ள நம் அரசி என்ன புண்ணியம் செய்தாளோ'' என்றும் ''நம் அரசியைத் திருமணம் செய்து கொள்ள இப்பெருமான் எத்தவம் புரிந்தானோ?'' என்றும், ''இத்திருமணம் நடைபெற இம் மதுரை என்ன புண்ணியம் செய்ததோ?'' என்றும், ''இத்திருமணத்தைக் கண்டு களிக்க நம் அரசனான மலையத்துவச பாண்டியன் இல்லையே'' என்றும் மக்கள் பற்பல விதமாகப் பேசிக் கொள்ளுகின்றனர்.

இறைவன் உலா வருங்காலத்தில் அப்பெருமானுடைய அழகைக் கண்ட ஒருத்தி அயலில் நின்ற ஒரு சித்திரக்காரனைப் பார்த்து ''இவ்வழகனைப் படம் எழுதித் தருவாயா? எனக் கேட்க ''அது யாரால் முடியும்!'' இந்த அழகை யாரால் எழுத முடியும்?'' என்று கேட்க, தனக்குச் சித்திரத்தில்கூட அந்த அழகன் கிடைக்க மாட்டான் என எண்ணி அவள் மூர்ச்சித்து விடுகிறாள்.

இராமபிரான் மிதிலையில் உலா வந்த போது இராமனைக் கண்ட பெண் ஒருத்தி எங்கு பார்த்தாலும் இராமனாகவே கண்டாளாம், ''ஐயோ; வேறு யாருமில்லையே! இவன் தனியாக வருகிறானே!'' என்றாளாம், ''வேறொன்றும் காண்கிலாதான் தமியனேன் வள்ளல் என்றாள்'' என்கிறது கம்பன்காவியம். அம்மாதிரி பிரமன் திருமால் தேவர்கள் யாரையும் காணாது எங்கும் சிவமயமாகக் காண்கிறாள் ஒரு பெண்.

''வலத்தயன் வரவு காணாள்; மாலிடம்
காணாள்; விண்ணோர்
குலத்தையும் காணாள், மண்ணோர்
குழாத்தையும் காணாள்; ஞானப்
புலத்தவர் போல கண்ட பொருளெலாம்
மழுமான் செங்கத்
தலத்தயன் வடிவாக் கண்டாள் ஒரு தனித்
தையல் மாது''.

இறைவனை எதிர்கொண்டழைப்பதற்கு, சில சுமங்கலிகளான பெண்களையனுப்பிக் காஞ்சனமாலை தான் பின்னால் வந்து, சிவபெருமானுடைய திருவடிகளைக் கங்கை நீர் விட்டு அபிடேகம் செய்து, சந்தனம் தெளித்து மலரிட்டு வழிபட்டு ''இறைவனே! அடியேனுடைய மகளைத் திருமணம் செய்து கொண்டு இந்நாட்டையும் வகித்து அரசாட்சி செய்ய வேண்டும்.'' என்று கூற, இசைந்த இறைவர் கலியாண மண்டபம் அடைகிறார். சகல தேவதைகளும் சகல உலகத்தவரும் மதுரையில் இம்மகோற்சவத்தைக் காண்பதற்காக கூடி விட்டனர். பூமி தாங்கியது, தெற்கு தாழவில்லை. ஆனால் இதே மாதிரியான திருமணம் வடநாட்டிலே நடந்தபோது, தென்நாடு உயர்ந்தது, கனம் தாங்காமல் வடநாடு தாழ ஆரம்பித்தபோது இறைவன் அகத்தியரை அழைத்து ''தென்நாடு செல்க. உலகம் சமமாக நிற்கும்'' எனக்கூற அவ்வாறே நிகழ்ந்தது. அதே அகத்தியர் உட்படத் தென் நாட்டில் இக் கலியாணத்திற்காகக் கூடியிருக்கத் தென்பூமி தாங்கியது. இது இறைவனருளே என்கிறார் பரஞ்சோதி.

(தொடரும்)

# சோழ நாட்டு திருப்பதிகள் - 40

—நித்திலக்கோ—

ஸ்ரீ ரங்கநாதர்சன்னதி



1 திருவரங்கம்

அரங்கநாதர்-அரங்கநாயகி
கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனையிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ராசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா! பள்ளியெழுந்தரு ளாயே.

—தொண்டரடிப் பொடியாழ்வார்
அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி.

(ஈண்டுதல்-நெருங்குதல்; ஈட்டம்-கூட்டம். பிடி-பெண்யானை)

அரங்கம் என்பது ஆற்றிடைக் குறையே' என்பது இலக்கணம். அரங்கம் என்ற சொல்லுக்கு அம்பலம், சபை என்பது பொருள்.

'கோயில்' என்று தலைமை பெற்ற வைணவத் திருப்பதி, இன்று ஸ்ரீரங்கம் என்று வழங்குகிறது. திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே மூன்றுகல் தொலைவில், காவிரி, கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கும் இடையே, தென்திசை நோக்கித் திருவரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கிறார்.

திருமால்புகழ் பாடிய பன்னிரு ஆழ்வார்களுக்குள் நம்மாழ்வாரை மட்டுமே பாடிய மதுரகவி யாழ்வாரைத் தவிர்த்த மற்றைய பதினொருவருள், தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்கநாதரை மட்டுமே பாடியவர். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இரண்டு பக்திப் பனுவல்களும் இவர் இயற்றி அருளியவை. 'திருப்பள்ளியெழுச்சி' என்னுந் திருமொழி பத்தும் நித்தியானுசந்தானத்திலுள்ளவை. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் திருவரங்கத்தைப் பற்றி மட்டும் உள்ள பாசுரங்களின் எண்ணிக்கை 247.

2. கோழி (உறையூர்)
அழகிய மணவாளர், உறையூர் வல்லி,
வாசலட்சுமி

கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவல ரேயொப்பர் குன்ற மன்ன,
பாழியம் தோளுமோர் நான்கு டையர்
பண்டிவர் தம்மையும் கண்டறியோம்,
வாழிய ரோவிவர் வண்ணம் எண்ணில்
மாகடல் போன்றுளர், கையில் வெய்ய
ஆழியொன் றேந்தி, ஓர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா!

—திருமங்கை யாழ்வார்
அருளிச்செய்த பெரிய திரு மொழி'

(பாழி-பெருமிடுக்கு; வெய்ய-கொடிய, ஆழி-சக்கரம், அச்சோ-ஆச்சரியக் குறிப்பிடைச் சொல்)

திருச்சி மலைக்கோட்டையிலிருந்து ஒரு கல் தொலைவு. திருப்பாணாழ்வார் பிறந்தருளிய தலம். திருமங்கையாழ்வார் மேற்குறித்த ஒரே பாடலால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

உறையூரில் திரு மூக்கீச்சுரம் என்ற தேவாரக் கோயில் இருக்கின்றது. இவ்வூர் ஒரு காலத்தில் சோழ அரசர்களின் தலை நகரமாக விளங்கியது.

### 3. தஞ்சை மாமணிக் கோயில்
### நீலமேகப் பெருமாள்—செங்கமல வல்லி

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாணாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்தவெம் அண்ணல்,
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக்கோயிலே வணங்கி,
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்
—பெரிய திருமொழி

(வெரு-அச்சம்; செகுத்த-அழித்த; வம்பு-வாசனை; நாமம்-புகழ்)

திவ்விய தேச எண்ணிக்கையில் ஒன்றாக இருப்பினும் இதில் மூன்று சந்நிதிகள் அடங்கியுள்ளன. நீலமேகப் பெருமாளுடன் தஞ்சையாளி நகர் நரசிம்மர்-தஞ்சைநாயகி மணிக்குன்றப் பெருமாள்--அம்புய வல்லியையும் சேர்த்துச் சேவிக்கலாம். மூவரும் கிழக்கு நோக்கி வீற்றிருந்த திருக்கோலம், தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் சற்றொப்ப இரண்டரை கல் அளவில் வெண்ணாற்றங் கரையில் இருக்கின்றன.

திருமங்கையாழ்வார்3-, பூதத்தாழ்வார் -1, ஆக 4 பாசுரங்கள் பெற்ற திருப்பதி.

### 4. அன்பில்
### வடிவழகிய நம்பி, அழகிய வல்லி நாச்சியார்

நாகத் தணைக்குடந்தைவெஃகா திருவெவ்வுள்
நாகத் தணையரங்கம் பேரன்பில்,-நாகத்
தணைப்பாற் கடல் கிடக்கும் ஆதி நெடுமால்,
அணைப்பார் கருத்தனா வான்

—திருமழிசையாழ்வார் அருளிச்செய்த
நான்முகன் திருவந்தாதி (36)

அணை-படுக்கை

இலால்குடி இரயில் நிலையத்திற்குக் கிழக்கே 3 கல் தொலைவு, திருமழிசை ஆழ்வாரின் ஒரேவெண்பாவால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது. இக்கோயிலில் கல்வெட்டுகள் நிரம்பவுள்ளன.

இக்கோயிலுக்கு எதிரில் அன்பில் ஆலந்துறை என்ற தேவாரக் கோயில் இருக்கிறது.

### 5. உத்தமர் கோயில் (கரம்பனூர்)
### புருடோத்தமன், பூர்வா தேவி.

பேரானை, குறுங்குடிஎம் பெருமானை,
திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூர் உத்தமனை, முத்திலங்
காரார்திண் கடல்ஏழு மலைஏழுஇவ்
வுலகேழுண்டு
ஆராதென்று இருந்தானைக் கண்டதுதென்
அரங்கத்தே
—பெரிய திருமொழி

(ஆராமை-போதும் என்று தோற்றாமை) ஏழுகடல்கள், உப்புக்கடல், கருப்பங் கடல், தேன்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற் கடல், புனற் கடல்.

ஏழுமலைகள்: இமயம், மந்தரம், கைலாசம், வடவிந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி. மேல் ஏழு உலகங்கள்: பூ, புவ, ஸுவ, மஹ, ஜந, தப, சத்தியம். கீழ் ஏழு உலகங்கள்: அதல, விதல, சுதல, நிதல, தராதல, ரஸாதல, மகா தலங்கள்.

திருச்சி சேலம் நெடுஞ்சாலையில், கொள்ளிட ஆறுகடந்து சிறிது தொலைவில் இத்தலம் இருக்கிறது.
திருச்சி விழுப்புரம் குறுக்குவழி இருப்புப் பாதையில் உள்ள திருவரங்கத்திற்கு அடுத்த இரயில் நிலையம்.

இக்கோயிலுள், சிவபெருமானுக்கும், பிரமனுக்கும் கோயில்கள் இருக்கின்றன. திருமங்கையாழ்வார் ஒரே பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளார்.

### 6. திருவெள்ளறை
### புண்டரீகாட்சன், பங்கயச் செல்வி,
### செண்பகவல்லி.

இந்திர னோடு பிரமன்
ஈசன் இமையவர் எல்லாம்,
மந்திர மாமலர் கொண்டு
மறைந்து உவராய்வந்து நின்றார்,
சந்திரன் மாளிகை சேரும்
சதுரர்கள் வெள்ளறை நின்றாய்,
அந்தியம் போதிது வாகும்
அழகனே! காப்பிட வாராய்.

—பெரியாழ்வார் திருமொழி

காப்பிடல் என்னும் இத்திருமொழி நித்தியானுசந்தானத்திலுள்ளது.
(உவராய்-மிக்க சமீபமாகவும், மிக்க தூரமாகவும் இல்லாமல் நடுவிடத்தில் இருப்பவராக; சதுரர்கள்-சமர்த்தர்கள்; அந்தியம் போது-மாலைப்பொழுது; காப்பிடுதல் - இரட்சையிடுதல் (திருவந்திக் காப்பு, பாதுகாவல்) வெள்அறை - ஸ்வேதகிரி; வெண்மையான பாறைகளாலியன்ற மலை)

திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில் சிறிது சென்று, மணச்சநல்லூர் கற்சாலையில் திரும்ப வேண்டும். உத்தமர் கோயிலிலிருந்து 7 கல் தொலைவிலும், ஸ்ரீரங்கத்திலிருந்து 10 கல் தொலைவிலும் இருக்கிறது.

உய்யக்கொண்டார் பிறந்த தலம். இலட்சுமிக்குப் பிரதானம் அதிகம். பெரியாழ்வார் 11, திருமங்கையாழ்வார் 13 ஆக 24 பாசுரங்கள் பெற்ற தலம். திருவெள்ளறையும் திருவேங்கடமும், திருவெள்ளக்குளமும் ஒரு வியக்தி.

### 7. புள்ளம் பூதங்குடி

வல்வில் இராமன், பொற்றாமரையாள்

கள்ளக் குறளாய் மாவலியை
வஞ்சித் துலகம் கைப்படுத்து,
பொள்ளைக் கரத்த போதகத்தின்
துன்பம் தவிர்த்த புனிதனிடம்
பள்ளச் செறுவில் கயலுகளப்
பழனக் கழனி அதனுள் போய்
புள்ளுப் பிள்ளைக்(கு) இரைதேடும்
புள்ளம் பூதங் குடிதானே

—பெரிய திருமொழி

(பொள்ளை-துவாரம்; போதகம்-யானைக் கன்று; செறு-கழனி, பழனம்-வயல்)

சுவாமிமலைக்கு வடமேற்கே 2 கல் தொலைவு, இத்தலத்திற்கு மேற்கே ஒரு கல் தொலைவில் தொண்டரடிப் பொடி ஆழ்வார் பிறந்தருளிய மண்டங்குடி இருக்கிறது. வட கிழக்கே 1 கல் தொலைவில் ஆதனூர் என்ற திவ்விய பிரபந்தத் தலம் இருக்கிறது.

ஜடாயு பரிசுத்தி பெற்ற தலம்.

இங்குள்ள இராமபிரான், எங்குமில்லாத திருக்கோலமாக ஒரு திருமொழி பாடிய திரு மங்கை மன்னனுக்காக, சங்கு சக்கரம் ஏந்தும் தடக்கையனாகக் காட்சி தருகிறார்.

### 8. திருப்பேர் நகர் (கோவிலடி)

அப்பக்குடத்தான், கமலவல்லி

உற்றேன் உகந்து பணிசெய்து உன்பாதம்
பெற்றேன், ஈதேயின் னம்வேண்டுவ தெந்தாய்
கற்றார் மறைவாணர்கள் வாழ்திருப் பேராற்கு
அற்றார் அடியார் தமக்கல்லல் நில்லாவே

-நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழி

வைதிக லட்சுமி விளங்கும் திவ்வியதேசம்.

அற்றார்-அடியார்-எம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்த அடியார், அற்றவர்களுக்கு அடியார், ''அற்று இறை பற்றே'' என்ற தனிலுள்ள அற்று'

எம்பெருமான் வலது கையின் கீழ் குடம் உள்ளது.

தஞ்சாவூருக்கு மேற்கே 11 கல் தொலை விலுள்ள பூதலூர் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 5-கல் அளவில் இருக்கும் மேலைத் திருக்காட்டுப் பள்ளியை அடைந்து அங்கிருந்து மேற்கே 5 கல் தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். மேலைத் திருக்காட்டுப் பள்ளிக் குக் கண்டி யூரினின்றும் ஓர் சாலை இருக்கிறது. கண்டியூரினின்றும் 11 கல் அளவு.

பெரியாழ்வார் 2, திருமழிசையாழ்வார் 1 திருமங்கையாழ்வார் 19, நம்மாழ்வார் 11, ஆக 33 பாசுரங்கள் பெற்ற திருப்பதி.

### 9. ஆதனூர்

ஆண்டளக்கும் ஐயன், ஸ்ரீரங்கநாயகி

''அன்னவனை ஆத வூர் ஆண்டளக்கும்
ஐயனை''

—திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமடல்

இவ்வோரடியால் பெருமாளை மங்களா சாசனம் செய்த திருமங்கையாழ்வார் திரு வுருவம் கர்ப்பக்ரஹத்திலிருக்கிறது.

சுவாமிமலையினின்றும் இரண்டரை கல் தொலைவு புள்ளம் பூதங்குடியினின்றும் அரை கல் அளவு.

இவ்வூரைக் காமதேனுபுரம் என்றும் அழைப்பர்.

### 10. திரு அழுந்தூர் (தேரெழுந்தூர்)

ஆமருவியப்பன், செங்கமலவல்லி

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேனதனை வாய்மடுத்துன் பெடையும்
நீயும்,
பூமருவி, இனிதமர்ந்து பொறியி லார்ந்த
அறுகால் சிறுவண்டே! தொழுதேன்
உன்னை,
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
அணியழுந்தூர் நின்றானுக் கின்றே
சென்று,
நீமருவி, அஞ்சாதே நின்று, 'ஓர் மாது
நின் நயந்தாள்; என்றிறையே
இயம்பிக்காணே,

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த 'திரு
'திருநெடுந்தாண்டகம்'

(தேம்-தேன்; போதைத் தேன்-மயக்கத்தைத் தரும் கள்; பெடை-பெட்டை; பொறி—வண்டின் புள்ளி)

இது வண்டுவிடுதூது என்னும் துறை.

உபரி சிரவசு ராஜன் ஒரு தேவலோக வழக்கில் நடுநிலை தவறியதால் அவன் ஆகாயத்தேர் பூமியில் விழுந்து அழுந்தின தலம்.

கும்பகோணம்-மயிலாடுதுறை இருப்புப் பாதையில் உள்ள தேரழுந்தூர் என்னும் இரயில் நிலையத்தினின்றும் சுமார் 2-கல் தொலைவில் உள்ளது.

கம்பர் பெருமான் பிறந்தருளிய தலம் இது.

கோவிலுக்கு நேரே கிழக்கில் தேவாரம் பெற்ற சிவன் கோயில் இருக்கிறது. இரண்டு கோவிலுக்கும் இடையில் சிறு உயரமான ஓர் இடத்தில் சாலையருகில் சம்பந்த விநாயகர் கோயில் இருக்கிறது.

காவிரிக் கரை ஓரம், இங்குள்ள கோபாலர் கருவறையில் பசுவும் தெரியும். பத்தடி உயரப் பெருமான். தங்கக் கவசம் வைரத் திருத்தாமத் துடன் சேவை சாதிப்பார். பஞ்ச கிருஷ்ண சேத்திரங்களில் இதுவும் ஒன்று.

திருமங்கை யாழ்வார் 45 பாசுரங்கள் இவ்வூரைப் பற்றிப் பாடியுள்ளார்.

(தொடரும்)

# திருக்கேதீச்சரம்

**ஆர். நமசிவாயம்**

செயலர்,
திருக்கேதீச்சுவர ஆலயத் திருப்பணிச் சபை.

''தொண்டர் நாள்தோறும் துதிசெய அருள் செய் கேதீச்சர மதுதானே''—சம்பந்தர்.

திருக்கேதிச்சர ஆலயம் இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் தமிழ் ஈழத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ளது. இது மிகவும் பழமையான ஆலயம். சரித்திர காலத்திற்குப் முன்பே இருந்து வருவதாக வரலாறு. திருஞானசம்பந்தர், சுந்தரர் பதிகம் பாடியுள்ளனர்; நாவுக்கரசர் திருத்தாண்டகம் ஒன்றும் உள்ளது.

**திருக்கேதீச்சர மூலவரின் திருப்பெயர் :**
**திருக்கேதீச்சர நாதர், நாகநாதர்**

**இறைவியின் திருப்பெயர் : கெளரி**

இக்கோயிலானது 10-ஆம், 11-ஆம் நூற்றாண்டுகளில் சோழ மன்னர் ஆட்சியில் உன்னத நிலை அடைந்திருந்தது.

சோழப் பேரரசர் இராச இராசன், அவனது வீரத் திருமகன் இராசேந்திரன் இக்கோயிலைப் புதிதாகவும் சிறப்பு மிக்கதாகவும் எடுப்பித்து தஞ்சை பெரிய கோயிலைப் போல் அரசாங்கத்தின் கீழ் பராமரித்து வந்தனர். இவர்கள் காலத்தில் இக்கோயில் இராச இராசேச்சரம் என்றும், நகரம் இராச இராசபுரம் என்றும் அழைக்கப்பட்டன. இச் சோழமன்னர்களால் அளிக்கப்பட்ட சோமாஸ் கந்தர், பாலமுருகன், இரு அம்பாள் ஐம்பொன் திருமேனிகள் கோயிலில் இன்றும் உள்ளன.

''சோழர் மாந்தைக் கல்வெட்டுச் சாசனங்கள்'' மேற்படி வரலாற்றைக் கூறுகின்றன. அடுத்து யாழ்ப்பாண மன்னர்களின் பராமரிப்பிலும் அவர்களுக்குப் பின் வன்னிய அரசர்களின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. வன்னிய அரசர்கள் சோழப் பேரரசர்களைப் போன்று சிறந்த சிவபக்தர்கள். பின்பு 1560ஆம் ஆண்



ஆலய முகப்புத் தோற்றம்

டில் பறங்கியரால் (போத்துக்கேயர்) அழிக்கப் பட்டது. யானையும், சிறுத்தைப் புலி கரடியும் வாழும் காடாக மண்டிக்கிடந்தது. முன்னூறு ஆண்டுகள் வரை திருக்கேதீச்சர முடையாரின் சாநித்தியம் தேவாரப் பாடல்களில் மட்டும்தான் இருந்து வந்தது.

இந்நிலைக்கு உள்ளாகியிருந்த இத்திருப்பதியின் பழைய இடம் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். ஆனால், அவ்விடம் அரசுக்குரிய நிலமாக இருந்தது. இக்காலத்தில் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியிலே இருந்தது.

13.12.1893ல் இப்பழைய கோயில் இருந்த இடத்தோடு கூடிய 43 ஏக்கர் காட்மைந்த இடம் நாட்டுக்கோட்டை நகரத்தவராகிய சைவப் பெருந்தகை ராம. அரு. பழனியப்பசெட்டியார் அவர்களால் ரூ.3,100--க்கு அரசினரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. 13.6.1894இல் பழைய ஆலயம் இருந்த இடமும், பழைய ஆலயப் பிரதிட்டா இலிங்கமும், சோமாஸ்கந்தர், பஞ்சலோக விக்கிரகங்களும் விநாயகர், நந்தி ஆகியவற்றின் சிலைகளும் மூல இலிங்கத்தின் ஆதார சிலையும் கண்டு எடுக்கப்பட்டன. இதன் நிமித்தம் இன்று கோயிலுள்ள இடத்தில் செங்கல்லால் சிறு கோயில் ஒன்று கட்டப்பட்டு 28.6.1903 இல் முதலாவது திருக்குட முழுக்கு செய்யப்பட்டது. இதற்குப் பின்பு இத்திருக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார் பரிபாலனத்திலிருந்து வந்தது.

கருங்கல்லினால் புதிதாகக் கட்டப்பட வேண்டுமென்ற விழிப்புணர்வு சைவ மக்கள் மத்தியில் நாடு முழுவதும் ஏற்பட்டது. 1948 இல் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை நிறுவப்பட்டு அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது. மங்களகரமான நல்லோரையில் நகரத்தாரின் ஆசியுடன் அவர்களிடமிருந்து திருப்பணிச் சபையின் பொறுப்பேற்றனர். அமரர் செட்டி நாட்டரசர் சர். எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்களின் முயற்சியால் இப்பணி நிறைவேறியது. இத்திருப்பணிக்கு நகரத்தார் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினார். பதினோரு பேர் கொண்ட அறங்காவலர் குழுவில் இரு நகரத்தார் பிரதிநிதிகள் நிரந்தரமாக இருந்து வருகிறார்கள்.

அமரர் பழனி ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியர் அவர்களின் தலைமையில் அமரர் திரு செல்லக்கண்ணு, அவர் தம்பி வைத்தியநாத தபதி அவர்களால் பலவித பாரம்பரிய சிற்பங்களுடன் பொலிவுமிக்க திருக்கோயிலாக அமைவதற்குப் படங்கள் வரையப்பட்டன.

முதற்கட்டமாக *மூலவர் அம்பிகை ஆகியோரின் கருவறைகள், முக மண்டபங்கள் கருங்கல்லினால் கட்டப்பட்டன. இவற்றிற்கு அடுக்கு விமானமும் சுதை வேலைப்பாடாக அமைக்கப்பட்டுள்ளது.

முதல் பிராகாரமும் திருச்சுற்று மதிலுடன் கட்டப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு இராசகோபுரங்கள் சுவாமி அம்பிகை சந்நிதிகளில் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் எழுப்பப்பட்டன.

முதல் பிரகாரத்தில்:——

1) துவாரகணபதி
2) துவார சுப்பிரமணியர்
3) அதிகார நந்தி
4) சூரியன், சந்திரர்
5) பதிகம்பாடிய சம்பந்தர், சுந்தரர்
6) கேது
7) நால்வர்
8) சேக்கிழார்
9) சந்தான ஆசாரியர்
10) திருமுறை, சிவாகமம், வேதம்
11) விநாயகர்
12) சோமாஸ்கந்தர்
13) மகாவிஷ்ணு
14) மகாலிங்கம்
15) பஞ்சலிங்கம்
16) ஆறுமுக நயினார்
17) சண்டேஸ்வரர்
18) நடராசர், சிவகாமி
19) வைரவர்
20) சனீஸ்வரன்
21) மகா இலட்சுமி
22) நவக்கிரகம்
23) பள்ளியறைமூர்த்தி, அம்பாள்

முதலியவை சிற்றாலயங்களிலும் குறடுகளிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கோட்டத்தில் தீர்த்த கணபதி, 3½ அடி உயரமுள்ள தட்சிணாமூர்த்தி அழகிய சிற்பம், இலிங்கோற்பவர், பிரமா, துர்க்கை சிலா விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

4½ அடி உயரமுடைய சோமாஸ்கந்தர் அம்பிகை இருவர் பாலமுருகன் எழில் வாய்ந்தவை. சோமாஸ்கந்தரின் புன்முறுவல் பார்த்துக்கொண்டே இருக்கலாம். மற்றும் நடராசர் பிட்சாடனர், வெள்ளிக்கிழமை உற்சவ அம்பாள், கல்யாண சுந்தரர், பிரதோஷமூர்த்தி, அதிகார நந்தி, அறுபத்து மூவர், மணிவாசகர் முதலிய மூர்த்திகள் புதிதாக வார்க்கப்பட்டுள்ளன. சரபர் விக்கிரமும் சிறப்பானதாக வார்க்கப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றிற்கும்மேல் பல சிற்ப வேலைபாடுகளுடன் கூடியதாக ஐந்து சித்திரத் தேர்கள் புதிதாக செய்யப்பட்டுள்ளன. இதுவரை செலவான தொகை ஒரு கோடி ரூபாய் ஆகும்.(இலங்கை நாணயம்).

இரண்டாவது கட்டமாக மகாமண்டபம், கொடிக் கம்ப மண்டபம், திருச்சுற்று மண்டபம் நீளம் 140 அடி, அகலம் 85 அடி, கல்யாண மண்டபம் ஆகியவை கட்டப்பட வேண்டும்.

சரபர், சகஸ்திரலிங்கம், முகலிங்கம், ஏரம்ப கணபதி, ஆறுமுக சுவாமி ஆகியோரின்

சிலா விக்கிரகங்கள் செய்யப்படவிருக்கிறது. இவர்களுக்கு மூன்றாம் பிரகாரத்தில் சிற்றாலயங்கள் எழுப்பப்படவேண்டும். மேலும், மகா மண்டபத்தில் வைப்பதற்கு பஞ்ச லோகத்தில் நந்தி, பலிபீடம், கண்ணாடி செய்யப்பட வேண்டும்.

பஞ்ச லோகத்தில் கௌரி அம்பிகையின் விக்கிரகமும் அண்மையில் வார்க்கப்படவிருக்கிறது.

மகா மண்டபத்தில் ஆறு கோட்டங்கள் இடம் பெறுகின்றன. இவற்றில்—

1) கஜசம்ஹார மூர்த்தி
2) அர்த்த நாரீஸ்வரர்
3) திரிபுராந்தகர்
4) சண்டீஸ்வர அனுக்கிரக மூர்த்தி
5) இராவணீஸ்வர அனுக்கிரக மூர்த்தி
6) உமா மகேஸ்வரர்


சிலா விக்கிரங்களாகச் செய்யப்படவிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட மகா மண்டபத்தின் அளவு 31க்கு 31 (அடி) .தூண்கள் முற்றும் கருங்கல்லினால் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கு வேண்டிய கற்கள் 90 சதவீதம் செப்பனிடப்பட்டுள்ளன. மூடு கற்களும் அளிவொட்டிகளும்தான் செய்யப்பட வேண்டும்.

திருச்சுற்று மண்டபத்திற்குத் தேவையான சித்திர கண்டத் தூண்கள் மொத்தம் 70. இவற்றில் 64 சிவ மூர்த்திகளின் விக்கிரகங்களும் 108 சிவ தாண்டவங்களின் பிம்பங்களும் கருக்குப் போடப்பட வேண்டும். இதுவரை 50 தூண்கள் கருங்கல்லில் செப்பனிடப்பட்டுள்ளன. மிகுதி 20 தூண்கள் செய்யப்படவேண்டும்.

அடுத்து கொடி மர மண்டபம். இதில் 73 அடி உயரத்தில் கொடிமரம் ஒரே தேக்கு மரத்தில் நிறுவப்பட்டுள்ளது. செப்புக்கவசம் கொடிமரத்திற்குப் போடப்பட்டுள்ளது. சிறப்பான நந்தியும் பலி பீடமும் தாபனம் செய்யப்யப்பட்டுள்ளன. இக்கொடி மர மண்டபத்திற்கு வேண்டிய கற்தூண்கள் 8 ஆகும். அவை பின்வருமாறு:—

| | | முடிந்தவேலை |
|---|---|---|
| 1) | திரைத் தூண் | 80சதவீதம் |
| 2) | குதிரைத் தூண் | 80 ,, |
| 3) | மண்டோதரி தூண்(உரு அளவு) | 40 ,, |
| 4) | ஆறுமுக நாவலர் தூண் ,, | 60 ,, |
| 5) | கேது தூண் ,, | 70 ,, |
| 6) | திருஞான சம்பந்தர் தூண்,, | 30 ,, |
| 7) | சுந்தரர் தூண் ,, | 60 ,, |
| 8) | மயன் தூண் ,, | 20 ,, |



அம்பிகை சன்னதியில் நிறுவப்படும் கற் தூண்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1) | சிம்மத் தூண் | 90 சதவீதம் |
| 2) | சிம்மத் தூண் | 70 ,, |

3) அஸ்வபாதம் 10 எண்கள் முடிந்தது.
4) மதலை போதிகை 10 எண்கள் முடிந்தது
5) கொடிப் பெண் நான்கரை அடி உயரம் செய்யப்படவிருக்கிறது.

முதல் பிரகார திருச்சுற்று மண்டபம் கருங்கற் பணி நீளம்140 அடி, அகலம் 85 அடி புதிதாகச் செய்யப்படவிருக்கும் உப பீடம் 2 அடி உயரம்

| | | |
|---|---|---|
| மதிப்பீடு விவரம் | — | ரூ.3,89,154.00 |
| அகழிப் பகுதிக்கான மதிப்பீடு | — | ரூ. 30,210.00 |
| மொத்தம் | — | ரூ.4,19,364.00 |

தமிழ்நாடு அரசு திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு ரூ.2,37,500 - நன்கொடை வழங்கி

யுள்ளது. மேலும் ரூபாய் 3 இலட்சம் வழங்குவதற்கு உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. இவை தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றம் செய்யப்படும் தொகைகள்.

ஆந்திரப் பிரதேச அரசும் திருமலை திருப்பதி தேவஸ்தானமும் ரூ.1,00,000 - வழங்கியுள்ளன. புதுவை அரசு ரூ.15,000 - வழங்கியுள்ளது.

இதுவரை செலவான தொகை ரூ.10 இலட்சம் (இந்திய நாணயம்). மேலும், வேண்டப்படும் மதிப்பீடு ரூ.15 இலட்சம். மேலும், இவற்றை எடுத்துச் சென்று சேர்மானம் செய்வதற்கு இலங்கைப் பணம் ரூ.30 இலட்சம் வரை தேவைப்படும்.

கடைசி கட்டமாக மூன்றாம் பிரகாரக் கிழக்கு வாயிலில் 150 அடி உயரமுள்ள இராச கோபுரம் சிறந்த சிற்பங்களுடன் எழுப்பப்படவிருக்கிறது. மற்றும் தெற்கு, மேற்கு, வடக்கு வாயில்களிலும் 50 அடி உயரத்தில் இராச கோபுரங்கள் கட்டப்படவிருக்கின்றன. இவை கற்றளியிலும் சுதை வேலைப்பாடாகவும் அமையும். மேலும், 20 அடி உயரத்தில் திருச்சுற்று மதில் சுவர் எழுப்பப்படவிருக்கிறது. இவற்றிற்கு மதிப்பீடு ரூ.ஒரு கோடி.

இத்திவ்விய திருப்பணியை நிறைவேற்றுவதற்கு கேதீச்சர முடையார் திருவருளை முன்னிட்டு இந்து மத நிலையங்கள், சைவப் பெருமக்கள் ஆகியோரின் ஆதரவு வேண்டப்படுகிறது.

திருக்கேதீச்சரத்தில் ஆறுகாலப் பூஜை காரண ஆகம முறைப்படி நித்தியமும் நடைபெறுகிறது. முக்கியமான உற்சவங்கள் பிரம்மோற்சவம், மகா சிவராத்திரி ஆகியவை. 1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற மகா சிவராத்திரி தினத்தில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கூடியிருந்தார்கள்.

மேற்படி திருப்பணி வேலைகளை மாமல்லபுரம் அரசினர் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி உற்பத்திப் பிரிவு தயார் செய்கிறது.

மாமல்லபுரம் திரு வை.கணபதி அவர்கள் மேற் குறிப்பிட்ட வேலைகளுக்கு வேண்டிய படங்களை தயாரிப்பதுடன் இவற்றைக் கட்டி நிறைவேற்றுவதற்கு வேண்டிய மேற்பார்வை வேலைகளையும் செய்து வருகிறார்.

இத்திருக்கோயில் கட்டிடம் நிறைவேற்றப்பட்டதும் தனிச் சிறப்பு வாய்ந்த தமிழ் நாட்டு திராவிடக் கோயில் கட்டிட சிற்பக் கலைகளின் தலை சிறந்த சின்னமாகவும், படைப்பாகவும் தமிழ் ஈழத்தில் விளங்கும்.

## அருணாசல மகிமை

மகேசனே மாமலையாக வீற்றிருப்பதால் தான், அருணாசலத்தை வலம் வருவது பிறவி எடுத்ததன் பெரும் பயனாகக் கருதப்படுகிறது. அம்மலையை ஒரு முறை சுற்றி வருவது சம்சாரக் கடலைக் கடக்கும் தோணியாகும். ஏழு நகரங்களையும் கடந்து முக்தி அடையும் ஏணியாகும். கிரிப்பிரதட்சணம் செய்வதால் நாம் செய்த பாவங்களெல்லாம் அகன்று, நமக்குக் கிட்டும் புண்ணிய பலன்களைப் பற்றி அருணாசலப் புராணத்தில் படிக்கும்போதே மெய்சிலிர்க்கிறது.

அருணாசலத்தை ஒருமுறை வலம் வர வேண்டும் என்று நினைத்து ஓரடி எடுத்து வைத்தால், ஒரு யாகம் செய்த பலன் கிட்டும்; இரண்டடி எடுத்து வைத்தால், ராஜசூய யாக பலன் உண்டாகும். மூன்றடி எடுத்து வைத்தால், அசுவமேத யாகத்தின் பலனும், நான்கு அடி எடுத்து வைத்தால் எல்லா யாகங்களும் செய்த பலனும் கிடைக்கும்.

மலையை வலம் வரும்போது நாம் எடுத்து வைக்கும் முதலடி, உலகையே வலம் வந்த பலனைத்தரும். இரண்டாவது அடி, புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனைத்தரும். மூன்றாவது அடி, எத்தனையோ தானங்கள் செய்த பலனைத்தரும். நாலாவது அடி எடுத்து வைத்தால் அஷ்டாங்கயோகம்செய்த பலனைத்தரும்.

அருணாசலத்தை வலம் வருபவர்களின் காலில் பட்ட தூசி பறந்து சென்று ஒரு நகரத்தில் விழுந்தால், அதுகைலாசமாகிவிடும். அத்தூசி ஒரு மனிதர் மேல் பட்டால், அவர் பிறப்பு இறப்பாகிய பிணி நீங்கி உயர் பதவி அடைவார்.

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும், வருடப்பிறப்பு அன்றும், சிவராத்திரியன்றும் கார்த்திகை தீபத்தன்றும் அருணாசலத்தை வலம் வந்தால் நிச்சயம் நற்கதி கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

அருணாசலத்தை ஞாயிறு அன்று வலம் வந்தால் சூரிய மண்டலத்தைப் பிளந்து சிவ பதம் அடையலாம்; திங்களன்று, தேவேந்திரனைப் போல் ஏழு உலகத்தையும் ஆளலாம்; செவ்வாய் அன்று, தங்களுக்குண்டான கடனையும் தரித்திரத்தையும் தொலைத்துப் பிறவிப் பிணி நீக்கலாம்; புதன் அன்று, நான்கு வேதங்களும் ஆறு சாத்திரங்களும் அறுபத்து நான்கு கலைகளும் தெரிந்த தேவர்களாகலாம்; வியாழன் அன்று, முனிவர்களுக்கும் மேலான பதவியை அடையலாம்; வெள்ளியன்று, விஷ்ணு பதமும், சனியன்று, நவக்கிரக பலனும் பெறலாம்.

அருணாசலத்தை வலம் வந்தவர்கள் கைலாசத்திற்குள் நுழையும்போது சந்திரன் வெள்ளைக் குடைபிடிப்பான். சூரியன் தன் கைகளில் விளக்கேந்தி வருவான். தர்மதேவதை கைலாகு கொடுப்பாள். நடக்கும் பாதையில் இந்திரன் மலர்களைத் தூவுவான். குபேரன் தண்டனிடுவான். அட்டவசுக்கள் மலர்மாரி பொழிவார்கள்.

**நன்றி: பரணீதரன் அவர்களின் அருணாசல மகிமை**



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

**(2)**

செந்தமிழ்ச் சைவமணி

**கோ. சண்முகம், பி.காம்.,**

''சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன''! (13-15)

சொற் பிரபஞ்சத்திற்கு அப்பால் விளங்கும் ஞான சொரூபியாக, அற்புதமாக விளங்கி, கற்பகம் போல் அருள்தரும் யானை முகத்துப் பெருமானே! வாழை, மா, பலா என்கிற முக்கனிகளை உண்பவரே! பெருச்சாளியை வாகனமாக உடையவரே.

வெறும் நூலறிவாலும் சொற்களாலும் கடவுளை அடைய முடியாது. இதை அருணகிரிநாதப் பெருமான் தெளிவாகக் கூறுகிறார்.

''வாசித்துக் காணொணாதது,
பூசித்துக் கூடொணாதது,
வாய்விட்டுப் பேசொணாதது, நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொணாதது,
நேசர்க்குப் பேரொணாதது,
மாயைக்குச் சூழொணாதது''

''மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்திரு மூர்த்தமென்றன் விழிக்கும் வினைக்கும் வெளி நின்றதால்'' என்று எடுத்தியம்புகிறது அபிராமி அந்தாதி.

விநாயகப் பெருமானின் திருவுருவத்தின் அடுத்த பகுதியைப் படம்பிடித்துக் காட்டி வெறும் நூலறிவாலும் சொற்களாலும் இறைவனை அடைய முடியாது என்று தெரிவிக்கிறார் ஒளவைப் பிராட்டியார் 13-15 அடிகளில்.

''இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே''

இப்பொழுது சிறியேனை ஆட்கொள விரும்பி, கருணையினால் அன்னை போன்று என் முன்வந்து, முடிவின்றித் தொடரும் பிறவியின் மயக்கத்தை வேரறுத்து என்கிறார்.

மாணிக்கவாசகப் பெருந்தகையை இறைவன் ஆட்கொண்டபோது, தொடர்ந்துவரும் பழைய வினைகளை விலக்கி, மும்மலங்களையும் அறுத்து, சிவமாக்கிய பின்பே ஆட்கொண்டார். இதனை,

''பக்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட''

என்ற அவர்தம் அருள்வாக்கினால் உணரலாம்.

ஆன்மாக்களாகிய நாம் வினைக்கீடாக எண்ணற்ற பல பிறவிகளை எடுத்து வருகிறோம். அருணகிரிநாதப் பெருமான் கூறுகிறார்


''எழுகடல் மணலை அளவிடி னதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்''.

அருளாளர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பிறவியறுக்க இறைவனை இறைஞ்சுவார்கள். காரைக்கால் அம்மையார் கயிலாயத்திற்குச் சென்றபோது இறைவன் என்ன வரம் வேண்டும் என்று கேட்க அதற்கு அவர் பிறவாமையையே எல்லாம்வல்ல சிவபெருமானிடம் வேண்டினார் என்கிறார் செந்தமிழ்ச் சக்கரவர்த்தி தெய்வச் சேக்கிழார்.

''இறவாத இன்ப அன்பு வேண்டி, பின்வேண்டுகின்றார்,
பிறவாமை வேண்டும்....'' திருத்தொண்டர் புராணம். அருணகிரிநாதப் பெருமான் இறப்பும் பிறப்பும் அற்ற இன்ப நிலையை வேண்டுகிறார்.

''இருவினையும் மலமுமுற, இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும் வகை பரம சுக மதனையருள்''....
திருப்புகழ்.

தம்மை ஆட்கொள விரும்பி அன்னை போன்ற கருணையினால் விநாயகப் பெருமான்



வந்ததைக் குறிப்பிடுகின்றார் ஒளவையார். அபிராமி பட்டரை அம்பிகை ஆட்கொண்ட விதமும் இவ்வாறே.

''நாயேனை யும் இங்கு ஒருபொருள் ஆக
நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை
உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய்; என்ன பேறு
பெற்றேன்;
தாயே, மலைமகளே, செங்கண்மால்திருத்தங்
கச்சியே''

—அபிராமி அந்தாதி.

தம்மை ஆட்கொள்ள வேண்டி முடிவின்றித் தொடரும் பிறவியின் மயக்கத்தை விநாயகப் பெருமான் வேரறுத்தார் என்கிறார் ஒளவைப் பிராட்டியார். 16-18 அடிகளில்.

''திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்து என் உளம்தனில் புகுந்து
குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே''
(19-24)

திருத்தமாக, முதன்மையாக விளங்கும் திரு ஐந்தெழுத்தின் உட்பொருள் தெளிவாகப் பதியும்படி என் உள்ளத்தில் புகுந்து, நிலவுலகில்குருவடிவாகத்திருமேனித்தாங்கி, என்தலைமேல்தாங்கி, என்தலைமேல் திருவடியைசூட்டி இது ஒன்றுதான் நிலையானதும் மெய்ப்பொருளானதும் என்று உணர்த்திச் சிறியேன் பிறப்பு இறப்புகளால் வாட்டம் அடையாதபடி அப்பெருமான் இன்ப வடிவாக இருந்து, எனக்குத் திருவருள் பாலித்து வெண்கோடு ஆகிய மெய்ஞானக் கருவியினால் கொடிய வினைகளை அடியோடு நீக்கினார் என்பதாம்.

மந்திரங்களில் தலையாய மந்தரம் திரு ஐந்தெழுத்து ஆகும். இதைச் செந்தமிழ்ச் சக்கரவர்த்தி சேக்கிழார் பெருமான்
''ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்
கும்''
என்று தெளிவாகவும் உறுதியாகவும் கூறுகிறார்.

இவ்வகவலை அளித்த ஒளவைப்பிராட்டியாரே மாணவர்கள் ஓதிப் பயிலுமாறு உள்ளன்போடு உணர்த்துவதும் ''சிவாய நம'' என்னும் திரு ஐந்தெழுத்தைத்தான்.

''சிவாயநம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்'' -நல்வழி

திருஐந்தெழுத்தின் பெருமையைக் கூறிய தமிழ் மூதாட்டியார் அடுத்து இறைவனே குரு வடிவாக வருவதைக் குறிப்பிடுகின்றார். ஆன்மாவிற்கு ஞானத்தை வழங்குபவர் இறைவரே, எனவேதான் அவர் ஞானசாரியார் என்று அழைக்கப்படுகின்றார்.

இதனையே, ''தம் முதல் குருவுமாய்'' என்றாய் மெய்கண்டார்.

''எட்டிரண்டும் அறியாத என் செவியில்
எட்டிரண்டும் இதுவாம் லிங்கமென
எட்டிரண்டும் வெளியா மொழிந்த குரு-
முருகோனே''

என்று தமக்கு முருகப் பெருமான் குருவாக நின்று உபதேசம் செய்த திறத்தினை அருணகிரிநாதப் பெருமான் கூறுகிறார்.

—(தொடரும்)


சித்திரபாரதம்
கதை செவ்வேள்
படம் MN ராஜா
தருமர் கண்ண பெருமானுக்கு முதல் மரியாதை செய்து பூஜித்து வணங்குகிறார். வீடுமர், துரோணர், மற்ற மற்ற அரசர்களுக்கும் உரிய மரியாதை செய்து வணங்குகிறார் தருமர்.
இராஜசூய யாகம் இவ்வாறு சிறப்புடன் நிறைவுபெற கிருஷ்ணர் பாண்டவர்களை ஆசீர்வதித்துத் துவாரகைக்குப் புறப்படுகிறார் வியாசரும் முனிவர்களும் தத்தம் தபோவனம் புறப்பட துரியோதனனும் அஸ்தினாபுரம் வந்து சேருகிறான்.
1
பாண்டவர்களின் மேம்பாடு கண்டு பொறாமையால் புழுங்கும் துரியோதனன் சகுனி, கர்ணன் மற்றும் தன் தம்பிகளைச் சபைக்கு வரவழைத்துச் சதியாலோசனை புரிகிறான்.
2
விண்ணவரும், மண்ணவரும் வியக்க வேள்வி புரிந்து தருமன் சக்கரவர்த்தியாகிவிட்டான். அரசர்களுக்கு உரிய முதல் மரியாதையையும் கண்ணனுக்குத் தந்தானே தவிர எனக்கு அவன் தரவில்லை.
3
"மயன் அமைத்த பளிங்கு மண்டபத்தில் தாமரைத்தடாகம் எது, வெற்றிடம் எது என்று தெரியாமல் நம் அண்ணன் வெற்றிடமென்று மயங்கித் தடாகத்தில் விழுந்தான்"
4
"அதைக் கண்டு வீமனும், திரௌபதியும் எப்படி சிரித்தார்கள்? அவர்களை நாம் அழவைக்க வேண்டும்" இது துச்சாதனன் கருத்து.
5
6


"உலகெங்குமுள்ள மன்னர்களை வெற்றி கொண்டாலும், பாண்டவர்கள் எனை வெல்வது அரிது! இன்றே போர் தொடுப்போம்." கர்ணனின் வீர முழக்கம் இது.
7
சகுனி எழுந்து முழங்குகிறான். "இடும்பன், பகன், சராசந்தனை வென்றுள்ள வீமனை நாம் வெல்வது அரிது. திரௌபதியின் சுயம்வரத்தில் விஜயனின் வில்வீரமே வென்றது கர்ணன் வெல்லவில்லை. ஏழு பிறவிகள் எடுத்து வந்து நாம் போர் செய்தாலும் பாண்டவர்களை மோது போரினால் வெற்றி கொள்ள முடியாது ஆனால் நான் அவர்களை சூதுபோரினால் வெல்வேன்".
8
சகுனி தாயம் உருட்டுவதில் தனக்குள்ள திறமையைக் காட்ட, துரியோதனன் அவனைக் கூட்டிக் கொள்கிறான்.
தருமனை எபபடி சூதாடவைப்பது?
9
துரியோதனா! இன்றே சிற்பிகளை அழைத்து தேவலோகத்திலும் இல்லாத ஒரு சித்திர மண்டபத்தைக் கட்டு. "மண்டபம் காணவா" என்றால் தருமன் வருவான் பிறகு பார் என் சாமர்த்தியத்தை.
பலே! மாமா பலே!
துரியோதனன் பசும் பொன்மயமான சித்திரமண்டபத்தைக் கட்டுகிறான். "அண்ணாவை அழைக்க வேண்டும்" என்று துரியோதனன் கூற, திருதராட்டிரரும் மகிழ்ந்து விதுரரிடம் ஓலை கொடுத்தனுப்புகிறார்.
10
இந்திரப்பிரத்தம் வரும் விதுரரைப் பிரியமுடன் வரவேற்கிறார்கள் பாண்டவர்கள். "உன்னை வஞ்சனையாக வருவித்துச் சூதாடச் செய்து உன் இராச்சியத்தை அபகரிக்கத் திட்டமிட்டிருக்கிறான் துரியோதனன்."
இது விதுரர் கூறுவது
11
"அத்தினாபுரம் செல்லவேண்டாம்" எனத் தம்பிகள் கூறுகின்றனர். "பெரியப்பா அழைப்பை நாம் மறுக்கக் கூடாது பெரியோர்கள் வெறுக்கும் சூதினை நாம் ஆடவேண்டாம். சித்திர மண்டபம் கண்டு வருவோம் புறப்படுங்கள்" தருமர்.
திரண்ட சேனையோடு அத்தினாபுரம் புறப்படுகிறார்கள் பாண்டவர்கள்.

# சரணம் பொன் ஐயப்பா

**ஐயப்பன் அடிமை**

அழகு கொஞ்சும் கேரளத்தை உருவாக்கிய பரசுராமர், பதினெட்டுமலைகளில் ஸ்ரீ தர்மசாஸ்தாவின் திருக்கோவில்களையும், பதினெட்டு கடலோரப் பகுதிகளில் ஸ்ரீ தேவியின் அருட்கோயில்களையும் அமைத்தார். அவ்வாறு அமைத்த பதினெட்டு மலைக் கோயில்களுள் சபரிமலை சாஸ்தா கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மேலே குறிப்பிட்ட பதினெட்டுக் கோயில்களில் ஒரு சில கோயில்கள் மட்டுமே நம்மால் அறிய முடிந்தது. அவைகள்யாவன: எரிமேலி, தர்மசாஸ்தா கோயில், அச்சன்கோயில், ஆரியங்காவு, குளத்துப்புழை, பொன்னம்பலமேடு என்பன. ஏனையன எங்கு அமைக்கப் பெற்றன என்பது இதுவரை சரியாக அறியப் பெறவில்லை. நாம் அறியக் கிடைத்து, அருளைத் தரும் சபரிமலை சாஸ்தாவின் வரலாற்றையும், அவரின் அருமை பெருமைகளைத் தெளிவாகவும், விரிவாகவும் இங்கு அறிந்து அருள் பெறுவோம்.

அரிகரசுதனாக தர்மசாஸ்தா ஐயப்பன்-அச்சன் கோவிலில் தியானத்திலிருக்கும் வானப்பிரஸ்தனாகவும், ஆரியங்காவில் இல்லறம் பூண்டு ஆண்டுதோறும் திருக்கல்யாணக்காட்சி புரிபவனாகவும், குளத்துப்புழையில் அழகு கொஞ்சும் பாலகனாகவும், எரிமேலியில் வில் அம்பு கொண்ட வேட்டைப் பிரியனாகவும், சபரிமலையில் துறவுக் கோலத்துடன் ஞான முத்திரை காட்டி, யோக நிட்டையிலிருக்கும் ஐயனாகவும், காந்த மலையில் ஜோதி சொரூபனாகவும் நின்று அருள் பொழிகிறார்.

நீண்ட காலமாக நம் தமிழகத்திலும், கேரளத்திலும் வழிபட்டு வந்த பரதேவதைகளான மாசாத்தான்', கண்டன் சாத்தா, சாத்தப்பன் முதலியவை சாஸ்தாவையே குறிப்பனவாகும். புத்தமதத்திற்கு உரியதான சரணம் விளித்தலும் (பகவான்சரணம்-பகவதி சரணம்), கூட்டம் கூட்டமாக யாத்திரை செல்லுதல் புத்த மதத்திலிருந்து தழுவிக் கொள்ளப் பெற்ற வழக்கம் எனக் கூறப்படுகிறது.


**ஐயப்பன் அவதாரம்:** தேவர்களுக்கு பல வகையில் இன்னல்களை கொடுத்து வந்த மகிஷாசுரனை துர்க்கா தேவி வதைத்ததன் பேரில் அவனது தங்கை மகிஷி கோபமுற்று கடுந்தவம் புரிந்து, அரிக்கும் அரனுக்கும் பிறக்கும் மகன், பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மச் சாரியாக மானிடனிடம் சேவை புரிந்தபின், அவனாலன்றி வேறு எவராலும் தன்னை அழிக்க இயலாது என்ற வரத்தை பிரம்மனிடமிருந்து பெற்றாள். அதன் பேரில் அவள் தேவர்கள் அனைரையும் துன்புறுத்தினாள். இக் கொடுமை தாங்காத தேவர்கள், திருமாலிடம் சரணடைந்தனர். திருமாலின் சொற்படி மகிஷியிடமிருந்து தப்பித்து நிலைத்து வாழ எண்ணி, அமுதுண்பதற்காக அசுரர்களுடன் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தனர். அப்பாற்கடலில் தோன்றிய சாகாநிலை தரும் அமுதினை தேவர்கள் மட்டுமே அடையவேண்டி திருமால் மோகினி அவதாரமெடுத்து வந்தார். மோகினி அவதாரமெடுத்த திருமால், அசுரர்களை மயக்கி பாற்கடலில் கிடைத்த அமுதினை தேவர்கள் மட்டுமே உண்ணும்படி செய்தார்.

பின் பத்மாசூரன் எனும் ஓர் அரக்கன் சிவபெருமானை எண்ணி தவமிருந்து, எவர் தலைமீது தன் கையை வைத்தாலும் அவர் அக்கணமே எரிந்து சாம்பலாக வேண்டும் எனக் கோரி வரம் பெற்றான். வரம் பெற்றபின், வரம் அளித்த சிவனாரிடமே சோதிக்கும் எண்ணத்துடன் நெருங்கினான். அது கண்ட சிவபெருமான், அரக்கனிடமிருந்து தப்ப எண்ணி, அவ்விடமிருந்து அகன்று ஒளிந்து கொண்டார். இதை அறிந்த மோகினி உருவெடுத்த திருமால் அவ்வரக்கனை மடக்கி, அவனைத் தானாகவே தன் தலையில் கை வைக்கச் செய்து சாம்பலாக்கினார்.

அப்பொழுது சிவபெருமான் மோகினி உருவிலுள்ள திருமாலின் பேரழகில் மயங்கி இரு பெரும் சக்திகள் இணைந்து, ஒரு பெரும் சக்தியாக மாறி, குழந்தை ஒன்று தோன்றியது. அரிகர சுதனாக அக்குழந்தைக்கு பிரம்மன் தர்ம சாஸ்தா எனப் பெயர் சூட்டினார். (அரு உருவமாய் காலத்திற்கும் குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின் படி காரிய காரிய காரணங்களுக்காக அரி அரனார் ஐக்யம் ஏற்பட்டது என்பது ஞானிகளின் கூற்று)

அக்குழந்தையின் கழுத்தில் சிவனார் தன் கழுத்தில் இருந்த மணிமாலையை அணிவித்தார். பின் அக்குழந்தை பிறந்ததன் குறிக்கோளை உணர்த்தி பம்பை நதிக்கரையினின்று மறைந்தார். அரிக்கும், அரனுக்கும் பிறக்கும் குழந்தை 12 ஆண்டுகள் மானிட சேவை புரிந்து வர வேண்டும். பின்னர் அவன் கையால் அன்றி வேறு எவராலும் தன்னை அழிக்க இயலாது என்ற வரத்தினை பிரம்ம தேவனிடமிருந்து பெற்ற, மகிஷி என்னும் அரக்கியை அழிப்பது ஐயப்பன் அவதாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதே சமயத்தில் பிள்ளைப் பேற்றுக்காக பந்தள மன்னன் ராஜசேகரன் சிவனாரைத் தொழுது, தனது கவலையை வெளிப்படுத்தினான். இவ்வாறு இருக்கையில் பம்பை நதி தீரத்திற்கு பந்தள மன்னன் வேட்டையாட வந்தபொழுது, சிவனார் அக்குழந்தையை அரசன் காணும்படி செய்தார். அக்குழந்தையை கண்ட மன்னன் பெருமகிழ்ச்சி அடைந்தான். தெய்வீக குழந்தையை அடைந்த மன்னன் ஆனந்தக் கூத்தாடும் பொழுது அரனார் அடியார் உருவுடன் வந்து ''மணியுடன் நீ கண்



டெடுத்த குழந்தைக்கு மணிகண்டன் எனப் பெயரிட்டு வளர்த்து வா'' என அருளி மறைந்தார்.

இவ்வாறு மணிகண்டன் பந்தள மன்னன் பாதுகாப்பில் இருந்து வந்தான். பந்தள நாட்டில் மணிகண்டன் வந்த வேளையில் ராணி கருவுற்று ஓர் ஆண் மகவு ஈன்றாள். இரு குழந்தைகளையும் கண்ணென வளர்த்து, தக்க பருவத்தில் குருகுலத்தில் சேர்த்தனர். மணிகண்டன் குருகுலத்தின் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினான். ஐயப்பனை தெய்வ அவதாரம் என அறிந்த குருதேவர் மணிகண்டனுக்கு மானசீகமாகத் தொண்டு செய்தார். மணிகண்டன் குரு தேவருக்கு குரு காணிக்கையாக ஊமையாக இருந்த அவரது மகனை பேச வைத்தார்.

தக்க பருவத்தில் அரசன் அரசியுடன் ஆலோசித்து மணிகண்டனுக்கு (பட்டம்) முடி சூட்ட எண்ணினார். இதை அறிந்த துர்மந்திரி ஒருவன் துர்போதனை செய்து அரசியின் மனதை மாற்றினான். பின் மணிகண்டனை அழிக்க பாலில்-கடும் நஞ்சு கலந்து கொடுத்தனர். இதனால் பாதிக்கப்பட்ட மணிகண்டனைக் குணப்படுத்த மருத்துவ மேதைகளால் இயலவில்லை. அதுசமயம் சிவபெருமான் துறவு வடிவத்தில் வந்து திருநீறணிவித்துக் குணப்படுத்தினார். பின்னர் மந்திர தந்திரத்தால் மணிகண்டனை கொல்ல கைக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீணாகி விட்டதில் சோர்வுற்ற மந்திரி, மணிகண்டனைக் கொல்ல புதிய திட்டம் ஒன்றை வகுத்தான். அதன்படி ராணிக்கு நீங்காத் தலைவலியென பொய்யுரைக்கச் செய்து, தனது கையாளான மருத்துவர் ஒருவரால் புலிப்பால் கொண்டு வந்தால் தான் ராணியின் தலைவலி நீங்குமெனக் கூறச் செய்தார்.

தாயின் தலைவலியை போக்க, கானகம் சென்று புலிப் பால் கொண்டு வருவதென மணிகண்டன் முடிவு செய்தான். பின் மன்னரிடம் அனுமதி பெற்று கானகத்திற்குத் தன் தலையில் இருமுடி தாங்கித்தனியாகப் புறப்பட்டார். அவ்வாறு கானகத்தில் பிரயாணம் செய்கையில், வாபர் என்னும் முகமதிய கொள்ளைக்காரனி

டம் சண்டையிட்டு அவனை நல்லவனாகத் திருத்தித்தன் நண்பனாக்கிக் கொண்டார். பின் மணிகண்டன் எருமை உருக்கொண்ட மகிஷியை வதம் செய்து அழித்தார். ஐயப்பனால் சாப விமோசனம் அடைந்த மகிஷி அழகிய மங்கையாகி, தன்னையே திருமணம் செய்து கொள்ள மணிகண்டனை வேண்டினாள். ஐயப்பன் தன்னுடைய பிரம்மசாரிய விரதத்தையும், தான் அவதாரமெடுத்ததின் நோக்கத்தையும் எடுத்துக்கூறி, எப்பொழுது என் சன்னிதானத்திற்கு ஒரு கன்னி சாமியாவது (முதலாண்டு) சபரிமலைசெல்லும்பக்தர் வராமலிருக்கிறாரோ அப்பொழுது உன்னை நான் மணந்து கொள்வேன் எனக் கூறினார். பின்னர் அவளைத் தன் சகோதரியாக பாவித்து அவளுக்கு தன் வலது புறத்தில் மஞ்சமாதா என்ற பெயருடன் வீற்றிருப்பாய் என அருள் புரிந்தார். அதனால் தான் கன்னி சாமிகள் வரும்பொழுது அதற்கு அடையாளமாக சரம் ஒன்றினை சரங்குத்தி என்னுமிடத்தில் தாம் வந்ததன் நினைவாக குத்தி வருகின்றனர். அவ்வாறு குத்தப்பட்ட சரத்தின் மூலம் ஒவ்வொரு முறையும் எவ்வளவு கன்னி சாமிகள் வருகின்றனர் என்பதை அறியலாம். மகிஷியைவதைத்த மணிகண்டநாதனை தேவர்கள் யாவரும் வாழ்த்தி வணங்கினர். பின் தேவர்கள் யாவரும் புலிகளாக உருமாறி ஐயனுடன் நாட்டுக்குச் சென்றனர்.

புலிக் கூட்டத்துடன் மணிகண்டன் நாடு திரும்புவதைக் கண்ட மக்கள் பயந்து நடுங்கி மன்னனிடம் சென்று தெரிவித்தனர். பந்தள மன்னன் மணிகண்டனை எதிர்கொண்டு அழைத்துச் சென்றார். புலிப்பால் கொண்டு வருவதற்கு பதிலாக புலியையே மணிகண்டன் கொண்டு வந்து பொய்யர்கள் முன்னிலையில் நிறுத்தினார். சூழ்ச்சிகள் வெளிப்பட்டதும் பொய்யர்கள் மணிகண்டனிடம் மன்னிக்கக் கோரினர். ஐயன் அவர்களை மன்னித்தார். புலிக்கூட்டங்களாக வந்த தேவர்களையும் திரும்ப அனுப்பினார்.

பின் பந்தள மன்னன் ஐயப்ப தேவனை வணங்கி, தந்தை மகன் உறவில் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கோரினார். தன் அவதார நோக்கம் முடிவுற்றதென ஆசி கூறி அரசர், குரு, மக்கள் ஆகியோருக்கு உபதேசம் செய்து விடைபெற்றார். என் ராஜ்ய எல்லைக்குள் இருந்து காட்சி கொடுக்க வேண்டுமென ஐயப்பனை பிரிந்திருக்க இயலாத மன்னன் வேண்டினார். அதற்குத்தான் ஐயன், நான் எய்யும் அம்பு விழும் இடத்தில் தனக்கு பதினெட்டு படிகள் அமைத்து கோயில் அமைக்குமாறும், தன்னைக் காணவரும் பக்தர்கள் ஒரு மண்டலம் விரதம் இருந்து, இருமுடி தாங்கி தன் கோவிலுக்கு வரவேண்டுமென்றும் கூறி மறைந்தார். அரசனும் அவ்விடத்தில் (இன்று ஐயன் கொலுவிருக்கும் இடம்) ஐயனின் ஆணைப்படி கோயில் அமைத்து கும்பாபிடேகம் நடத்தினார். அதனால்தான் அன்றும், இன்றும் பக்தர்கள் ஐயப்பனைக் காண ஒரு மண்டலம் விரதமிருந்து, காவியுடுத்தி, இருமுடி தாங்கி ஐயப்பன் பிரயாணம் செய்த காட்டு வழியில் பிரயாணம் செய்து அவரது அருளைப் பெறுகின்றனர்.

கும்பாபிடேக நாளன்று மணிகண்டன் சாஸ்தாவின் விக்ரகத்தினுள் ஜோதி சொரூபமாக ஐக்கியமானதை அனைவரும் கண்டனர். பந்தள மன்னனும், மக்களும் வேண்டியதற்கிணங்கி ஐயப்பன் அசரீரியாக ''தான் வருடம் ஒரு முறை மகர சங்காந்தி தினத்தன்று கதிரவன் மறையும் நேரத்தில் பொன்னம்பலமேட்டின் மீது (காந்த மலை மீது) ஜோதி ரூபமாகக் காட்சி கொடுத்து அருள்புரிவதாகக் கூறினார். அதுபோல் இன்றும் காந்தமலையின் மீது மகர சங்கராந்தி அன்று ஜோதி வடிவமாக நமக்குக் காட்சி கொடுத்து அருள் புரிகிறார்.

இத்தகைய அருள் வள்ளல் ஐயப்பனின் வரலாற்றினை அறிந்து அவர் புகழ்பாடும் அன்பர்கள் ஐயன் பேரருளைப் பெற்று நல்வாழ்வு பெறுவார்களென வரலாறு நூல்கள் கூறுகின்றன.

---

## திருமுதுகுன்றம் ஸ்ரீ குமாரதேவ சுவாமிகள் ஆதினகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சிவப்பிரகாச சுவாமிகள் ஆசியுரை

''திருக்கோயில்'' இதழில் விருத்தாசலம் ஸ்ரீகுமாரதேவரின் தெய்வீக நிகழ்ச்சிகள் எனும் தலைப்பில் கட்டுரை (வரலாறுகள்) மிக அருமையாக வெளியிட்டு இருக்கிறீர்கள். அத்துடன் மிகமிகச் சிறப்பாக திருவாரூரில் தேர் ஓடச் செய்தமை குறித்து மிக அருமையாக திருவாரூர் தேர், ஸ்ரீ குமாரதேவர் சுவாமிகள், அரசர் முதலிய படங்கள் மிகமிக அருமையாகச் சித்தரித்து இந்த நிகழ்ச்சியை எல்லோர் மனதிலும் படியும்படியாக அமைத்திருக்கிறீர்கள் என்பதை அறிந்து மிக்க பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

இதுபோன்று தங்கள் திருக்கோயில் இதழில் பல தெய்வீக நிகழ்ச்சிகள் வெளிவர வேண்டும் என்றும், அதற்குத் தங்களின் அரிய பணிகள் மேன்மேலும் சிறப்புடன் விளங்க வேண்டி ஸ்ரீகுமாரதேவப் பெருமானையும், ஸ்ரீநடராஜப் பெருமானையும் தியானிக்கின்றோம்.



# கம்பரின் இராமாவதாரம்

டாக்டர் த. அமிர்தலிங்கம் [25]

பரதனைத் தோற்றத்தில் மாத்திரம்அல்ல உள்ளத்திலும் இராமரே என்பதை குகன் இப்பொழுது பரதனோடு உரையாடும்போது தெரிந்து கொள்கிறான். ''இங்கு வந்தது யாது காரணம் கருதி?'' என்று குகன் வினவுகிறான். பரதன் '' உலகம் முழுதாண்ட தந்தை அரசை எனக்களித்து அநீதி புரிந்தார். அவ்வநீதியை மாற்றி, இராமரை அழைத்துச் சென்று அரசராக்கும் பொருட்டு வந்தேன்'' என்று கூறுகின்றான்.

''தழுவின் புளிஞர் வேந்தன் தாமரைச்செங் கணானை
எழுவினும் உயர்ந்த தோளாய் எய்திய தென்னை என்ன
முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்றான்''

பரதன் கூறியதைக் கேட்கும் குகன் மகிழ்ச்சிப் பரவசம் கொண்டு மீண்டும் பரதனின் திருவடிகளை வணங்கிக் கூறுகிறான். ''தாய் தன் வரத்தால் தந்தையிடம் வாங்கிக் கொடுத்த அரசைப் பாவம் என்று துறந்த பரதா! உன் உயர் குணத்திற்கு ஒரு இராமர் அல்ல; ஆயிரம் இராமர்களும் ஈடாக மாட்டார்கள். நான் அறிவில் குறைந்த வேடுவனே யானாலும் சத்தியமாகச் சொல்லுகிறேன். உன் குலத்து உதித்த மற்ற சிறந்தவர்கள் புகழையெல்லாம் நட்சத்திரங்களின் ஒளிபோல மங்கச் செய்து, நீயே மங்காது ஒளிவிடும் சூரியனைப் போல் சுடர்விட்டு விளங்குகிறாய்'' என்று பரதனை உளமார வாழ்த்திப் புகழுகிறான் குகன்.

''தாய் உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை
தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியில் அம்மா''
''என்புகழ் கின்றது ஏழைஎயினனேன் இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோல்
மன்புகழ் பெருமை நுங்கண் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத் தோளாய்''.

இராமபிரானின் பண்பு நலன்களை நோக்கியே முன்பு குகனுக்கு இராமர்மேல் அளவு கடந்த பக்தி உண்டானது. இப்பொழுது பரதனுடைய தியாகத்தை-சகோதர வாஞ்சையை-சத்தியத்தைக் காணக் காண பரதன் மேலும் மட்டற்றகாதல் வளர்கிறது குகனுக்கு.

பரதன் மேலும் பக்தி பூண்டு பரவசமுற்றுத் திகழ்கிறான் குகன். ''நம் அண்ணன் இங்கு எங்கு வீற்றிருந்தான்?'' என்று பரதன் குகனை வினவ, குகன் இராமன் பள்ளிகொண்ட புற்படுக்கையைப் பரதனுக்குக் காட்டுகிறான். கல்லினிடையே பரப்பிய புல்லினால் ஆகிய இராமர் துயின்ற படுக்கையைக் கண்டு கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக்கிச் சாஸ்டாங்கமாக அவ்விடத்தில் விழுந்து வணங்குகிறான் பரதன். ''அறுசுவையுணவு உண்டு, அரண்மனையில் பஞ்சசயனத்தில் படுத்துறங்க வேண்டிய ஸ்ரீராமர், கல்லிலும் புல்லிலும் படுக்கவும் கிழங்குகள் காய்கள் உண்ணவும் காரணமான மாபாவி நான் இன்னும் உயிர் விடாமல் நிற்கிறேனே! எத்தனைக் கொடியவன் நான்'' என்று தன்னைத் தானே வெறுத்தும் கூறிக் கொள்கிறான் பரதன்.

''இராமரை வனவாசத்திலும் பிரியாதவனாய் உடன் போந்த நம் அன்பு இலக்குவன் இராப்பொழுதைக் கழித்த இடம் எது? காட்டுக'' என்கிறான் பரதன். ''நிமிர்ந்த நேயம் பூண்டவன் தொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்தது யாண்டு?'' என்று பரதன் வினவியதாகக்காட்டுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இராமருக்குற்ற துன்பம் கண்டவர் யாரும் கண்ணுறங்க இயலாது; அப்படியிருக்க இலக்குவனுடைய கண்கள் மட்டும் எவ்வாறு துயிலும்? துயிலவே முடியாது என்பதை உணர்ந்திருப்பதனாலேயே



பரதன், 'இலக்குவன் துயின்ற இடம் எது?' என வினவிடாமல், 'பொழுதைக் கழித்த இடம் எது?' என்று வினவுகிறான். குகனும்

''அல்லையாண் டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றான் இமைப்பிலன் நயனம்''

என்று விடை கூறுகின்றான்.

''இலக்குவன் எங்கே கண் இமைத்தான்? கரிய திருமேனி ஐயனும் சீதையும் துயில, வில்லும் கையுமாய் அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் இலக்குவன் காவல் செய்து நின்றஇடம் இதுதான். அண்ணனுக்கு வனவாசம் நேர்ந்ததை எண்ணி அவன் துயர்க் கடல் மூழ்கியவனாய் தாரை தாரையாய்க் கண்களில் நீர் பெருக்கிப் பெருமூச்செறிந்து இரவு முடியும் வரையிலும் நின்றவாறே காவல் செய்திருந்தானே தவிர ஒரு நொடி நேரமும் கண்கள் மூடவில்லை'' என்று குகன் மறுமொழி மொழிகிறான். அதைக் கேட்டு வெய்துயிர்ப்ப வனாய் பரதனும் ''இராமருக்கு உடன்பிறந்த வரில் நான் அவர் துயருக்குக் காரணமானேன். தம்பி இலக்குவனோ அவர் துயர் துடைப்ப தற்குக் காரணமாக நிற்கின்றான். அவனே கொடுத்து வைத்தவன்'' என்று கூறி மனம் கலங்குகின்றான்.

''என்பத்தைக் கேட்ட மைந்தன் இராமனுக் கிளையார் என்று
முன்பொத்த தோற்றத் தேமில் யான்என்றும் முடிவிலாத
துன்பத்துக் கேது வானேன் அவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டோ அழிகிதென் னடிமை என்றான்''

இராமர் துயின்றிருந்த புழுதியிடத்தி லேயேபடுத்துப் பரதசத்ருக்கனர்கள் அன்றைய இரவுப் பொழுதைக் கழிக்கிறார்கள். வைகறை ஆவதும் குகனிடத்தில் பரதன் ''வேடுவர் தலைவ! இப்பொழுதே எங்களைக் கங்கா நதியினின்று கரையேற்றுவாய் ஆனால், கொடிய துக்க சாகரத்திலிருந்தும் கரையேற்றி எங்களை இராமர்பால் சேர்த்ததாகும்'' என்று வேண்டுகின்றான். உடனே குகனும் ''ஓடங் களைக் கொணர்க'' என்று உத்திரவிட, கைலாயம் போலவும், மேருமலை போலவும், குபேரனது புஷ்பக விமானம் போலவும் சிறந்து பல்வேறு வடிவங்களில் விளங்கும் ஓடங்கள் அங்கே கங்கையில் எங்கும் இடமில்லை என்று கூறும் வண்ணமாக வந்து குவிகின்றன. அளவில் லாத அவ்வோடங்களில் ஏறி, அளவிலாத பரதனுடைய சேனைகளும் கங்கை நதியைக் கடந்து தென்கரைக்கு வந்து சேருகின்றன.

பரதனின் யானைகள் ஓடங்களில் ஏறாமல் கங்கை வெள்ளத்தை நீந்தியே கடந்து செல் கின்றன. அவ்வாறு நீந்தும்போது யானை களின் மத்தகங்கள் மாத்திரம் நீருக்குமேலே தோன்றுவதைக்காட்டவரும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் அம்மத்தகங்களைக் கங்காதேவியின் தனங்கள் என வருணித்து ''பூங்குழற் கங்கை முலையெனப் பொலிந்த மாதோ'' என்று பாடு கிறார். யானைகள் தம் துதிக்கையை உயர எடுத்து உந்தி நீந்தும்போது கங்கை நீரும் முந்திச் செல்லும் காட்சியைக் காட்டவரும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமபிரானைக் காணும் ஆவலில் கங்கையும் நீந்துவது போல் இருக்கிறது என்று

''கங்கையும் இராமர் காணும் காதலது என்ன மாதோ'' என்று பாடும் நயம் நாம் உணர்ந்து மகிழத்தக்கது.

தேர்களை அப்படியே ஓடங்களில் ஏறஇயலாது என்பதால் அவற்றின் ஒவ்வோர் உறுப்பினையும் தனித் தனியே பிரித்துக் கலங்களில் ஏற்றுகின்றனர்.

பால்போன்ற வெண்ணிறமுடைய எட்டுக்கோடி குதிரைகளும் அவ்வாறே படகுகளில் ஏற்றப்படுகின்றன. குகனின் ஓடங்கள் அளவிறந்த ஆடவரையும் பெண்டிரையும் மறுபடியும் மறுபடியுமாக ஏற்றிச் சென்று வடகரைக்குச் சென்று சேர்ப்பிக்கும் காட்சியை வர்ணிக்கும் கம்பர், கடல்நீரை மொண்டு மழையைப் பொழிந்து விட்டு மீண்டும் கடல்நீரை மொள்ள வரும் மேகங்கள் போல் ஓடங்கள் திகழ்கின்றன என்று கூறுகிறார். அறுபதினாயிரம் அக்குரோணி சேனைகளும், அளவுகூறமுடியாத எண்ணிக்கை கொண்ட ஆடவர், பெண்டிருமாகிய அனைவரும், கங்காநதியைக் கடந்து வடகரைக்கு வந்து சேர்ந்துவிடுகின்றனர். அவர்களில் முனிவர்கள் மாத்திரம் கங்கையைக் கடப்பதற்கு ஓடங்களில் ஏறாமல் தத்தம் தவவலிமையால் ஆகாயமார்க்கமாகப் பறந்து கங்கையைக் கடப்பதையும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ''மொய்விசும்பு ஓடமாகத் தேவரின் முனிவர் போனார்'' என்று பாடுகிறார்.

தம்முடன் வந்த எல்லோரும் கங்கையின் தென்கரைக்குச் சென்று சேர்ந்ததற்குப் பிறகே இறுதியாக பரத சத்ருக்கனர்கள் ஓடம் ஏறுகிறார்கள். அவ்வோடத்தில் பரதசத்ருக்கனர்களுடன் அவர்தம் தாயர் மூவரும், அமைச்சர் சுமந்தரரும், குகனும் ஏறிக்கொள்ள ஓடம் புறப்படுகிறது. இராமரைப் பயந்த தேவியான கோசலையை அம்மூவருள் இன்னார் என்று தனியே வேறு பிரித்தறிந்து அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற தணியாத ஆவலும் குகனுக்கு உண்டாகிறது. முகப்பொலிவினாலேயே தேவரும், ஏனையோரும் தொழப் பேறு பெற்ற கோசலை இவராகத் தான் இருக்க முடியும். என்பதாகவும் குகன் அவரை உணர்ந்து கொண்டு அதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டி ''இவ்வம்மை யார்?'' என்று பணிவோடு வினவுகிறான். பரதனும் ''அரசர்கள் வந்து மொய்த்துச் சூழக்கூடிய சக்கரவர்த்தி தசரதரின் முதல் தேவி இவரே. மூன்றுலகங்களைப் படைத்த பிரம்மாவை முன்படைத்த திருமாலாகிய இராமபிரானை மகனாகப் பெறும் பெரும்பேறு பெற்று, நான் பிறந்த காரணத்தால் அப்பேற்றினைத் துறந்த பெருமையுடைய கோசலை இவரே!'' என்று தெளிவு படுத்துகின்றான்.

''சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குரிசில் இவர் ஆரென்று குகன்
வினவக் கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகம்
ஈன்றானை முன்ஈன்றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்
பிறத்தலால் துறந்த பெரியார்''

என்கிறான்.

கோசலையை இன்னார் என்று கண்டு கொண்டவுடன் அவர் திருவடிகளில் நெடிது விழுந்து வணங்குவதோடு, அவருற்ற துயரம் எண்ணி அழவும் செய்கிறான் குகன். ''இராமனுக்கு இனிய துணைவன். எனக்கும், இலக்குவனுக்கும், சத்ருக்கனனுக்கும் மூத்தவன். குன்றனைய தோள்கொண்ட இக்குரிசில் குகன்'' என்று கோசலைக்குக் குகனை அறிமுகப்படுத்துகிறான் பரதன். அண்ணன் என்று பரதன் அறிமுகப்படுத்திய குகனை 'வருந்தாதே' என்று தேற்றும் கோசலை, ''இராம லக்குவனர்கள் நாடு வந்ததும் உங்களுக்கு ஒரு சிறந்த சகோதரன் கிடைப்பதற்கு நல்லதாயிற்று. நீங்கள் ஐந்து பேரும் ஒற்றுமையுடையவர்களாய் இப்பூவுலகத்தை நெடுங்காலம் பாதுகாத்து ஆள்வீராக'' என்று ஆசியும் கூறுகின்றார்.

''நைவீர் அலீர் மைந்தீர் இனி துயரால்
நாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்துவும் நலமாயிற்றாம்
அன்றே விலங்கற்றிண்தோள்
கைவீரக் களிறனைய காளையிவன்
தன்னோடுங் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம்
அளித்திரென்றாள்.''


அறமும் அன்பும் ஓர் வடிவு கொண்டது போல் கோசலையின் அருகில் வீற்றிருக்கும் சுமத்திரையைக் காணும் குகன் அவரையும் சுமத்திரையே என்று உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் ''இவர் யார்?'' என வினவுகின்றான். ''சத்தியத்தைக் காக்க உயிர் துறந்த தசரத சக்கரவர்த்தியின் இளையதேவி இவரே. யாவரும் தொழத் தக்க தெய்வமான இராமருக்குத் தம்பியும் உண்டு என்று வையம் போற்றும்படியாக அவரை எப்பொழுதும் நீங்காதிருப்பவனாகிய இலக்குவனை மகனாகப் பெற்ற பெருமையுடைய சுமத்திரை இவரே'' என்று தெளிவுபடுத்துகிறான் பரதன்.

''அறந்தானே என்கின்ற அயல்நின்றாள் தனை
நோக்கி ''ஐய அன்பின்
நிறைந்தாளை உரை'' என்ன நெறி திறம்பாத்
தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்தன் இளந்தேவி, யாவருக்கும்,
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளனென்னப் பிரியாதான்
தனைப் பயந்த பெரியாள்''

என்றான்.

கோசலை, சுமத்திரை ஆகிய இருவரை அடையாளம் கண்டு கொண்டு தொழுதவுடன் குகனுக்கு எஞ்சியிருப்பவர் இராமரைக் காட்டிற்கு விரட்டிய கைகேயிதான் என்பது பரதன் கூறாமலும் தெளிவாகத் தெரிகிறது. சுடு மயானத்திற்குத் தசரதரையும், கொடுங்கானகத்திற்கு இராமரையும் ஓட்டியவள்; திருமால் முன்பு காலால் அளந்து பெற்ற வையத்தை வரத்தால் அளந்துகொண்ட கொடியவள் இக்கைகேயியே என்பதைத் தெரிந்துகொள்கிறான் குகன். எனினும் இக்கைகேயி இராமரைக் காட்டிற்கு விரட்டிய காரணத்தால் அன்றோ தான் அவரைக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற முடிந்தது என்ற ஒரு எண்ணம் இந்நேரம் குகனுக்குத் தோன்றியிருக்க வேண்டும்! அதனால் அவன் அவரையும் மதித்துப் போற்றி ''இவர் யார் என்பதையும் எனக்குக் கூறிட வேண்டும்'' என்பதாகப் பரதனைக் கேட்டுக் கொள்கிறான். அப்பொழுது பரதன் கொள்ளும் வேதனையை என்னென்பது ! அதை வர்ணிக்க யாரால் ஆகும்? (தொடரும்)


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர் பாதயாத்திரை குழுவினர் 29.11.90 அன்று ஏழடி உயர எழில்மிகு வல்லக்கோட்டை முருகர் திருவுருவப் படத்துடனும், நன்கொடையாகப் பெறப்பெற்ற இரண்டு கிலோ எடை வெள்ளி வேலுடனும் அமைந்தகரையிலிருந்து பாதயாத்திரை புறப்பட்டு வல்லக்கோட்டை ஆலயம் வந்து பரணி தீபம் ஏற்றி வழிபட்டனர். இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருவேற்காடு தவத்திரு சுவாமி இராமதாசர், திருப்பணி ஆர்வலர் திரு எம்.வி.அரங்கநாதன், அன்னதான அறப்பணியாளர் திரு வி.இராஜாராம் ஆகியோர் உடன் உள்ளனர்.

பதிவு எண். எம் 7039





அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர் ஆலயத் தேர்த் திருப்பணியை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ., அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். தவத்திரு சுந்தர சுவாமிகள், துணை ஆணையாளர் திரு கே.கே. ராஜா எம்.ஏ.,பி.எல்., ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.